

www.tamilarangam.net



# எழுச்சி



தமிழீழ விடுதலை இயக்கத்தின் உத்தியோக பூர்வமான ஏடு.... ரூ. 2

குரல்-4- TELO – Thamil Eelam Liberation Organization – நவம்-டிசம்பர் 1984

# ஏகாதிபத்தியத்தின் வாயில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள்!

## உலக மக்களே, எங்கள் போராட்டத்திற்கு ஆதரவளியுங்கள்!!

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனம், இனவாத சிறிலங்கா அரசின் ஒடுக்குமுறை தாளாது,-சிறிலங்கா அரசுக்கெதிராகவும், அதன் பின்னணியிற் திகழும் சர்வதேச பயங்கர வாதிகளுக்கெதிராகவும் தமது பறிக்கப்பட்ட இறைமைகளை மீட்கவும்-சுதந்திரமாக வாழவும் போராடிக் கொண்டிருக்கின்றது, உலக மக்களையே மரணத்தின் எல்லைக் கோட்டுக்குத் தள்ளிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான எமது இந்தப் போராட்டத்துக்கு, மனிதாபிமானமுள்ள உலக மக்களே உதவி புரியுங்கள்! ஒடுக்கப்படும் இனத்தின் விடுதலைக்கு ஆதரவளியுங்கள்!!


இலங்கைவாழ் தமிழ் பேசும் இனம், இபபோது ஏகாதிபத்தியத்தின் வாயில் அகப்பட்டு நசுங்கிசெத்துக் கொண்டிருக்கின்றது. சிறிலங்கா அரசின் இனவாதத் தூண்டுதலால் பெரும்பான்மை இனமான சிங்களமக்களுக்கும், சிறுபான்மை இனமானதமிழ் பேசும் மக்களுக்கும் இடையே இனவிரோதம் மூட்டப்பட்டு, இனவாத அரசின் தமிழ்பேசும் இனம் மீதான ஒடுக்குமுறையினால், தமிழ் பேசும் இனம், இழந்து போன தமது இறைமைகளை மீளப் பெற சிறிலங்கா அரசுக் கெதிராகவும், அவ்வரசு கரமிணைத்துள்ள சர்வதேச பயங்கரவாதிகளுக் கெதிராகவும் வலுவான போராட்டத்தை மேற்கொள்ளக் களமிறங்கியுள்ளது.

தமிழ்பேசும் மக்கள் இப்போது அமெரிக்க, பிரிட்டிஷ், தென்கொரிய, சீன, தென்னாப்பிரிக்கப்-பயங்கா-நவீன ஆயுதங்களுக்கும், CIA, SAS, மொஸாட்,சின்பெத்போன்ற உளவு ஸ்தாபனங்களின் இரவல் 'ஆலோசனைகளுக்'கும் எதிராக முகங்கொடுக்க வேண்டியுள்ளனர்.

இவ்வுலகையே பிணைக்காடாக்கும் முயற்சியில், குறிகொண்டுள்ள-உலக மக்களை மரணத்தின் எல்லைக் கோட்டுக்கே இழுத்துச் சென்று கொண்டிருக்கின்ற இச்சர்வதேச பயங்கரவாதிகளின் இலங்கை மீதான பார்வை, இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளையும், குறிப்பாக இந்திய உபகண்டத்தையும் மிகவும் ஆபத்தான சூழ்நிலைக்குள் தள்ளிக் கொண்டிருப்பதுவெளிப்படையாகவே தெரிந்த தொன்று!

எனவே, உலக மக்களை அச்சுறுத்தும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான எமது விடுதலைப் போராட்டத்திற்கு - மனிதாபிமானமுள்ள -சித்திரவதைக் குள்ளாக்கப்படும் தமிழ்பேசும் இனத்தின் மீது அனுதாபமுள்ள-அனைத்துலக மக்களே, உங்களது பூரண ஆதரவை வழங்குவதன் மூலம், இலங்கை வாழ் சிறுபான்மை இனத்தின் விடுதலைக்குத் துணை போவதுடன், உலகிலே ஒடுக்கப்பட்டு வரும் அனைத்து மக்களையும், ஏகாதிபத்தியங்களின் பிடியிலிருந்து அகற்றி, சர்வதேச பயங்கரவாதத்தை முறியடிக்க ஒத்துழையுங்கள்!

# சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தகர்ப்பு.



கைதடியில் ரெலோஸ்களால் தகர்க்கப்பட்ட வாகனங்களில் சில.

யாழ் நகரில் இருந்து 10 மைல் தொலைவில் உள்ள ஸ்ரெலியரால் பயிற்றுவிக்கப்பட்ட பொலிஸ் கொமாண்டோக்களை கொண்டிருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையமானது 20-11-84 அன்று மாலை 2-10 மணிக்கு தமிழீழ விடுதலை இயக்கப் போராளிகளால் தகர்க்கப்பட்டது தெரிந்ததே.

இந்நிகழ்வின்போது 53 கொமாண்டோக்கள் உயிரிழந்தனர். மற்றும் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

தாக்குதலின்போது முன்னணியில் நின்று தாக்குதலில் பங்கேற்றியதோழர் நிக்கிலஸ் தமிழ் ஈழ மண்ணுக்கு தனது உயிரை அர்ப்பணித்துக் கொண்டான்.

இக்கால வரையில் தமிழ் ஈழத்தில் நடத்தப்பட்ட

(தொடர்ச்சி 12ம் பக்.)

## ரெலோவின் புரட்சிகர மக்கள் எழுச்சிக்குரல்

Printed by Astmoor Litho Ltd, 21-22 Arkwright Road, Runcorn, Cheshire.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

# விடுதலைக்குரல்

தமிழ் ஈழப் பகுதிகளில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் அரச பயங்கரவாதம் தமிழ் பேசும் மக்களைசொல்லொண்ணா துயரத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது. நாளும் வீதிகளில் தமிழ் பேசும் மக்கள் சடலங்கள் ஆக்கப் படுகின்றனர். துயர கீதங்கள் நித்தமும் இசைக்கப்படுகின்றன.

இத் துயரங்களுக்கு மத்தியில் தமிழ் பேசும் மக்கள் விடுதலை ஒன்றுதான் இலட்சியம், அது உயிரிலும் பெறுமதியானது, மேலானது,என்பதை உணர்ந்து, விடுதலை உணர்வை மழுங்கடிக்க பேரினவாத அரசு எத்தகைய துன்பங்களை விளைவிக்கினும், அதையெல்லாம் தாங்கத் தயார் என்று சொந்த நாட்டின் விடுதலைக்காக மிகப் பெரிய துன்பங்களைத் தாங்கியும், அச்சுறுத்தல்களை எதிர்த்தும் களத்தில் நின்று கொண்டிருக்கின்றனர். இந் நிலையில் விடுதலைப் போராட்டத்தை கோஷ்டி சண்டையாக மாற்றி எமது சொந்த மக்களை விரக்தியின் விளிம்புக்கு தள்ள முனைந்து கொண்டும், சிறிலங்கா அரசுக்கு மகிழ்ச்சியான செய்திகளையும் அழித்துக் கொண்டிருக்கின்றனர். உமா, பிரபா குழுவினர்.

அண்மையில் பிரபா குழுவினரால் வெளியிடப்பட்ட மக்கள் விடுதலையா? மனித வேட்டையா? என்னும் தலைப்பில் வெளிவந்த துண்டுப்பிரசுரத்தில் தமது இயக்க போராளிகள் ஆறு நபர்களை தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகத்தினர் பயங்கரமான சித்திரவதைக்கு உட்படுத்தி கொலை செய்ததாகவும், இக்கொலையை நேரில் கண்ணுற்ற பொது மக்கள் இருவரையும் கொலை செய்ததாகவும்,இது ஒரு மனிதாபிமானம் அற்ற செயல் எனவும் குறிப்பிட்டு இருந்தனர். மேலும், கொலை செய்யப்பட்டவர்களின் படங்களையும் பிரசுரித்து இருந்தது உண்மை நிலையை எடுத்துரைப்பதாயிற்று.

இத்துண்டு பிரசுரத்திற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் உமா குழுவினர் இக் கொலைக்கும் தங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாததுபோல் குறிப்பிட்டிருந்ததுடன்,பிரபா குழுவினரின் சில செயல்களையும் அம்பலப் படுத்தி துண்டு பிரசுரத்தை வெளியிட்டு இருந்தனர்,

இவ்வாறான நிலைமைகளை நாம் நோக்கும்போது மக்களிடையே ஆன எண்ணங்கள், கருத்துக்கள், நம்பிக்கைகள் தளர்ந்து செல்லக் கூடிய ஒரு தோற்றப்பாங்கை விளைவிக்கிறது என்றால் மிகையாகாது.

இயக்கங்களிடையே ஐக்கியத்தை வலுப்படுத்தி சிறிலங்கா அரசுக்கு எதிராக பாரிய அளவில் மக்கள் போராட்டத்தை நெறிப்படுத்திக் கொண்டிருக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினராகிய நாம் இத் துயர நிகழ்ச்சியை இட்டு பெரும் வேதனையும் கவலையும் அடைகின்றோம்.

சிறிலங்கா அரசானது தமிழ் பேசும் மக்களுக்கு பலத்த நெருக்குவாரத்தை அளித்துக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் தமிழ் ஈழ விடுதலைக்காக போராடுகிறோம் என சொல்லிக் கொண்டிருக்கும் இக்குழுவினர் தங்களுக்கிடையேயான கோஷ்டி சண்டை மூலமாகவே தமிழ் ஈழத்தை வென்றெடுக்கலாம் என, எண்ணியுள்ளனர் போலும். ஏனெனில்,இவர்களின் கோஷ்டி சண்டை இன்றுமட்டுமல்ல, முன்பிருந்தே நடந்து கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

எதிரிகளுக்கு எதிராக பாவிக்கப்பட வேண்டிய இவர்கள் கையில் உள்ள ஆயுதங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக திரும்பி உள்ளது. மக்களின் விடுதலையை நோக்கம் கொள்ளாமல், செயல்படும் இக்குழுவினர் தங்கள் சுய எண்ணப்பாடுகளுக்கு ஏற்பவே தங்கள் கையில் உள்ள ஆயுதங்களை பாவிப்பதில் குறியாய் இருப்பதையும் இவர்களின் வெத்து வேட்டுப் போராட்டங்களையும் தமிழ் பேசும் மக்கள் உணர்ந்து நிராகரிக்கத் தலைப்பட்டு விட்டனர்.

எககாலம் எப்படியான போராட்ட நடவடிக்கைகளை முன் எடுக்க வேண்டுமென்று அறியாத நிலையில் குழப்பம் விளைவிக்கும் செய்கையை மேலும், மேலும் செய்து கொண்டு அல்லது செய்ததாகச் சொல்லிக் கொண்டு இருக்கும் இக்குழுவினர் மக்களை வெறும் மூடக் கும்பலாகவே எண்ணிக் கொண்டு செயல்படுவது அப்பட்டமாக தெரிகிறது.

# நிதியின் தாக்கம் புரட்சிப் பாதையில்...

தமிழீழ விடுதலைப் போராட்டம், இப்போது திசை திரும்பி விட்டது. பயிற்சியற்றுச் சோம்பிக் கிடந்த அரச இராணுவம், துருப்பிடித்த ஆயுதங்கள், சிந்தனை வறுமையிற் பிறந்த ஆலோசனைகள் — இவற்றினை முகம் கொடுக்க உயர்ந்த விடுதலைப் போராளிகளின் கரங்கள், இப்போது, அந்நிய இராணுவத்தையும், நவீன, நுணுக்கமான ஆயுதங்களையும், 'கடன்வாங்கிய' திட்டங்களையும் கைபார்க்க வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. அதாவது நமது விடுதலைப் போராட்டம், சர்வதேசப் பயங்கரவாதிகளுக்கெதிராகவும், ஏகாதிபத்திய த்துக்கெதிராகவும் திசைமாறியுள்ளது. எனவே, புரட்சிக்கரங்களை நிதி கொண்டு வலுப்படுத்த — அனைத்து மக்களையும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

புரட்சி தயாரிப்பில் ஈடுபடும் தமிழீழ விடுதலை இயக்கத்துக்கு நிதி உதவி வழங்குவீர்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
K. ANANDAN, A/C 11506
INDIAN OVERSEAS BANK,
BRANCH - VIRUGAMBAKKAM,
MADRAS - 600092.
(S-INDIA).

ஆனால் மக்களோ தங்களது போராட்ட நடவடிக்கைகள் எப்படி அமைய வேண்டும் என்பதிலும், போராட்ட முன்னெடுப்புக்களை திறமையாக கையாண்டு கொண்டிருக்கும் விடுதலை இயக்கங்களுக்கு தங்கள் பங்களிப்பை வழங்க தயாராகி உள்ள நிலைமையும், பிற்போக்கான போராட்டங்களை எடுப்பவர்களை ஒதுக்கி விடுவதற்கு ஆயத்தமாக உள்ளதையும்,இக் குழுவினர் அறியாமல் தங்களை பெரும் தீரர்களாக எண்ணிக் கொண்டு செயல் பட்டுக் கொண்டிருப்பதை நோக்கும்போது கவலைப்பட முடியுமே,அன்றி,வேறு வழியில்லை.

கொரில்லா தாக்குதல் தான் தங்களது பாணி அதுவே தங்களது தாரக மந்திரம் என புலம்பிக் கொண்டும், மக்கள் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியாத நிலையில் மக்களை அழிவுப் பாதைக்கு இட்டு செல்லக் கூடியதாக ஆங்காங்கே சிறு சிறு தாக்குதல் நிகழ்த்தி விட்டு ஓடி ஒளிந்து கொண்டு, ராணுவ நெருக்கடிக்குள் மக்கள் சிக்குப் பட்டுக் கொண்டிருக்க தங்களது வீரப் பிரதாபங்களை பத்திரிகை மூலமும், துண்டுப் பிரசுரம் மூலமும் அறிக்கை எழுதுவதில் மட்டும் அதி சூரப் புலிகளாக இருக்கின்றனர். இவர்களின் அதி சூரப்புலித் தனங்கள் தமிழ் ஈழத்திற்காக போராடும் விடுதலை இயக்கங்களுக்கு உள்ளேயும் (ஊடுருவல் முயற்சி) காட்ட முனைந்து நிற்பது இவர்களின் அடாவடித்தனங்களில் ஒன்றான மிகவும் முக்கிய நடவடிக்கையாகும்.

இக்கால கட்டத்தில் உலக ஏகாதிபத்தியத்திற்கும், சிறிலங்கா பேரினவாத அரசுக்கும் தகுந்த பதிலடி கொடுக்குமுகமாக மக்கள் ஆயுத போராட்டத்திற்கு உரிய முறையில் செயல்படும் இயக்கங்களுக்கு தங்களது முழுமையான பங்களிப்பை வழங்கிக் கொண்டும், வழங்க முன் வந்து கொண்டும், இருக்கின்ற தமிழ் பேசும் மக்களின் முன் நோக்கான சிந்தனைகளை குழப்பம் அடைய வைத்துக் கொண்டும்,சிறிலங்கா அரசின் எதிர் பிரச்சாரத்திற்கு துணை போகும் செயல்களை செய்து கொண்டிருக்கும், செய்ய முனைந்து கொண்டிருக்கும் குழுவினரின் தான் தோன்றித்தனமான செயல்கள் மிகவும் வருந்துவதற்கு உரியதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும். இனிமேல் இம் மாதிரியான செய்கைகளை மக்களால் அனுமதிக்க முடியாததும் ஆகும்.

"தீவிரமான வீரர்கள் வீரதீர செயல்களை புரிவரென்றும், இந்த வீரர்களிடமிருந்து வீரதீர செயல்களை எதிர் பார்த்துக்கொண்டு ஜனக்கும்பல் கைகட்டி ஒன்றும் செய்யாமல் இருப்பது என்றும் ஒரு தவறான சித்தாந்தத்தை நரோத்னிக்ஸ்கள் கொண்டிருந்தனர்."

ரஸ்சிய மக்களால் ஒதுக்கப்பட்ட நரோத்னிக்ஸ்களின் எண்ணக் கருத்துக்களை முழுமையாகஜீரணித்தரித்துக்கொண்டு செயல்படும் இக்குழுவினரின் சிந்தனைகள் தமிழ் பேசும் மக்களின் நலன் கருதியா? என்ற ஐயப்பாட்டையே எமக்கு தருகிறது.

இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கும் தமிழ் பேசும் மக்களின் விடுதலை நோக்கி ஐக்கியத்தை வலுப்படுத்தி தீர்க்கமானமுன்னெடுப்புடன் போராட்டப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் எமது இயக்கம் ஆறு விடுதலைப் போராளிகள் கொலை செய்யப்பட்டதற்கு ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதுடன் இவ் ஈவிரக்கமற்ற மனிதாபிமானம் அற்ற, இச் செய்கைக்கும் சிறிலங்கா அரசின் இன ஒடுக்கல் நடவடிக்கைகளுக்கு சந்தர்ப்பங்களை வழங்கி கொண்டும் இருக்கும் அடாவடித்தனமான செய்கைகளை வன்மையாக கண்டிக்கிறது.

மேலும், உறுதியற்ற நிலைப்பாட்டுடனும் தமிழ் ஈழ விடுதலையை பின் தள்ளிக கொண்டிருக்கும் இக்குழுவினர் திட்டமற்ற செய்கைகளை தீர்க்கமாக உணர்ந்துசெல்லும் பாதையில் தடைகளை அகற்றுமாப் போல, தமிழ் ஈழ போராட்ட பாதையில் உள்ளசிறு தடைகள் ஆன இவர்களை இனம் கண்டு கொண்டு ஒதுக்குவதுடன் சரியான வழியில் நடாத்தப்படும் ஆயுதப் போராட்டத்திற்கு முழு பங்களிப்பை வழங்குவதே தமிழ் பேசும் மக்களுககு முன் உள்ள முக்கிய கடமை யாகும்.

# மகா சங்கத்தின் எதிர்ப்பு

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு அறிவித்துள்ள திட்டங்களை நிராகரிக்குமாறு மகா சங்கத்தின் மேலிட அங்கத்தவரான பன்னசிக மகா நாயக தேரோ புத்தபிட்சுகளின் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். மேலும், அவர் பேசுகையில் நாட்டை அரசாங்கம் பலவீனப்படுத்துவதற்கு இச்சங்கம் அனுமதியாது என்றார். புத்தபிட்சுகளின் அமைப்பான மகா சங்கம் ஆட்சேபித்தால் அரசு அதை கேட்கத்தான் வேண்டும். என்றார்.

அங்கு விமலரத்தின தேரோ என்ற பிட்சு பேசுகையில் பிட்சுக்கள் அரசுக்கு எதிராக செயல்படவில்லை என்றும், தங்கள் ஒற்றுமையை காட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

# சிங்கள இளைஞர்களுக்கு ராக்கட் பயிற்சி.

இலங்கை கிழக்கு மாநிலத்தில் உள்ள திருகோணமலையில் சிங்கள இளைஞர்களுக்கு ராக்கெட் தாக்குதல் தொடர்பான ஆயுதப்பயிற்சி அளிக்க இலங்கையின் தேசிய பந்தோபஸ்து அமைச்சகம் முடிவு செய்துள்ளதாக இலங்கையிலிருந்து கிடைத்த விசேஷ தகவல் தெரிவிக்கிறது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் இலங்கைஅரசாங்ககடற்படை அதிகாரிகள் பயிற்சி நிலையம் உள்ளது. இந்த பயிற்சி நிலையத்தில் உள்ள அதிகாரிகள் இலங்கை அரசால் உத்தரவிடப்படும் சிங்களர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று இலங்கை பந்தோபஸ்து அமைச்சகஅறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இங்கு அனுப்பிவைக்கப்படுகின்ற சிங்கள இளைஞர்களுக்கு 'அதிரடித் தாக்குதல்' பற்றிய பயிற்சி அளிப்பதற்காக சில விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த வாரம் இந்த பயிற்சி நிலையத்தை இலங்கை ராணுவ அதிகாரிகள் சிலர் பார்வையிட்டனர்.

கடந்த ஒரு வருடத்தில் 2500க்கு மேற்பட்ட இலங்கை ராணுவ கடற்படை வீரர்களுக்கு கொரில்லா தாக்குதலை தடுப்பது பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

விடுதலை இயக்க இளைஞர்களை ஒழிக்கவும். அடக்குவதற்காகவும் ராக்கெட் தாக்குதல் நடத்த உள்ளதாகவும் இலங்கை அரசு அறிவித்திருந்தது.

இதற்கான பயிற்சியை திருகோணமலையில் நடத்துவதற்கும் இப் பயிற்சிக்கு விமானப்படை, கப்பல்படை வீரர்களை அழைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பயிற்சியின் போது 'கஜபாகுஅணியைச் சேர்ந்த 600 பேருக்கும் சிங்கள இளைஞர் சங்கங்களைச் சேர்ந்த சிலருக்கும் ராக்கெட், பீரங்கித் தாக்குதல் பற்றிய பயிற்சி தரப்படுவதோடு, கிழக்கு கடலோரப் பகுதியின் ஓரங்களில் வருகின்ற கப்பல்கள் கண்காணிக்க சிறு சிறு குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளன.

சிறிய படகில் சென்று கடலோர பகுதியில் இவர்கள் கண்காணிப்பு செய்து வருகின்றனர். விடுதலை இயக்க இளைஞர்கள் வெளிநாடுகளிலிருந்து கடல் மார்க்கமாக வருவதைத் தடுப்பதற்காக புதிய திட்டங்கள் நடைமுறைபடுத்தவும் இலங்கை பந்தோபஸ்து அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

www.tamilarangam.net



# தமிழீழப் போராட்டத்தில் மலையக மக்கள்



வசந்தத்தை எதிர்பார்த்துக் கொண்டு இற்றைக்கு ஒன்றரை நூற்றாண்டு காலமாக உழைத்து, உழைத்தே ஓடாகிவிட்ட மலையகத் தமிழர்கள் இன்று இழப்பதற்கு ஏதுமற்ற பாட்டாளிகளாக - ஒரு ஒழுங்கான வர்க்க விடுதலையைப் பெற்றெடுக்கத் தகுதியுடைய ஒரு சமூகமாக ஸ்ரீலங்கா அரசால் நன்கு கட்டிவளர்க்கப் பட்டுள்ளார்கள். குடியுரிமை, வாக்குரிமை பறிப்பில் மலையகமக்கள் மீது கைவைத்த அரசின், தொடர்ந்த - ஒடுக்குமுறை நடவடிக்கைகளே இப்போது இலங்கையின் மத்திய மலைநாட்டில் புரட்சி வெடிப்பதற்கான சாத்தியத்தையே உருவாக்கியுள்ளது. இப்பெருமை மாறிமாறி வந்த ஸ்ரீலங்கா அரசின் அரசபீடத்தவர்களையே சாரும்!

சென்ற இதழின் மீதியை இனித் தொடர்வோம்.

இப்படியொரு துர்ப்பாக்கிய நிலையை எதிர்பார்த்திராத அந்த மலையகத் தமிழ் மக்கள் செய்வதறியாது திகைத்து நின்ற வேளை, அவர்களில் சில நூறுபேர் பாராளுமன்றத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்யாமல் விட்டதில்லை. சத்தியாக் கிரகத்திலும் கூட ஈடுபட்டனர். ஆனால் விடிவுதான் ஏது? பாராளுமன்றத்தில் இருக்கையை நிரப்பிக் கொண்டிருந்த தமிழ்த் தலைவர்களோ அன்றி எவருமோ அன்று, அந்தப்பிரஜா உரிமைப் பறிப்புச் சட்டத்தைக் கிழித் தெறியக் கோரினார்களா? என்றால் இல்லை' ஆனால் 1976 இல் 'புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்' சுலோக அட்டையை ஏந்தியது!

### தோட்டங்கள் தேசியமயமாக்கல் படல்

அதற்கு முன்னர் 1957 இல் S. W. R D பண்டார நாயக்காவின் ஆட்சியின் போது மலையகத் தமிழ் மக்கள் மீது அடுத்த கட்ட ஒடுக்குமுறை இடம் பெற்றது. "தோட்டங்கள் தேசிய மயமாக்கப் படல்" என்ற போர்வையில் அவர்கள் வாழ்ந்து வந்த தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டு, அங்கு சிங்கள மக்கள் வலுக் கட்டாயமாகக் குடியேற்றப்பட்டனர். இதை அந்த மலையகத்தமிழ் மக்கள் எதிர்த்தபோது அவர்களுக் கெதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப் பட்டன அரசாங்கத்தால் வன்முறை தூண்டி விடப்பட்ட போதும் அந்த மக்களின் பாதுகாப்புக் கருதி தமிழ்பேசும் மக்களின் தனிப்பெரும் தலைமைகள் எந்தவித செயற்பாடுகளிலும் ஈடுபட்டதில்லை.

### 'ஸ்ரீமா–சாஸ்திரி' ஒப்பந்தம்

1964ம் ஆண்டு கால கட்டத்தில் இலங்கை இந்தியக் காங்கிரஸ்கட்சியின் தலைவர்களாக இருந்தனர் 'தொண்டமான்', 'அஸீஸ்' போன்றோர், அஸீஸ்' க்கு 'செனட்டர்' பதவி வழங்கப் பட்டதைத் தொடர்ந்து, கட்சி பிளவுபட்டது. இதனால் தொண்டமான், 'இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்'கட்சியை ஸ்தாபித்தார். இக்கால கட்டத்தில் தான் 'ஸ்ரீமா-சாஸ்திரி' ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டது. ஆமாம் 'திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயகா ஆட்சியிலிருந்த அக்காலத்தில் இடம் பெற்ற இவ்வொப்பந்தமானது மலையகத் தமிழ் மக்களை-தோட்டத்தொழிலாளர்களை - இந்தியாவுக்கு அனுப்புவதற்காகச் செய்யப்பட்டதாகும். இந்த வகையில் அன்றிலிருந்தே அம்மக்கள் நாடுகடத்தப்பட்டனர். தாம் வாழ்ந்த மலைப்பிரதேசங்களை பிரிய மனமின்றித் தவித்தபோது பலாத்காரமாக அல்லது வலுக்கட்டாயமாக அவர்கள் கப்பலேற்றப் பட்டனர். இவ்வொப்பந்த நடவடிக்கை அண்மைக் காலம் வரை நீடித்தது. ஆனால் தமிழ்ப் பெரும் தலைவர்களும் அரசவையில் வீற்றிருக் கத்தான் செய்தார்கள்!

### தமிழ்த்தலைவர்கள் பாராமுகம்

1965 இல் UNP' தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் என்பன ஒன்றிணைந்து தேசிய அரசை அமைத்தன. இதில் திருச்செல்வம் (Q C) மந்திரிந் பதவி பெற்றார் தொண்டமானும் 'செனட்டர்' பதவி பெற்றார் G, G. பொன்னம்பலம் தோட்டத் தொழிலாளரது வாக்குரிமையைப் பறித்தமையால்தான் காங்கள் காங்கிரசிலிருந்து பிரிந்ததாக S J V தம்பட்டமடித்தாலும் 1965 இல் தேர்தல் முடிந்தபோது ஐக்கியத்துடன் தேசிய அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள முன்வந்தது வேடிக்கைதான். தோட்டத் தொழிலாளரது பிரஜா உரிமையைப் பறித்த UNP அரசுடன் இணைந்திருந்த போதும் கூட, அது பற்றி எந்த நிபந்தனையையும் முன்வைக்கவில்லை இந்த தமிழ் அரசியல் தலைவர்கள் 1965—70 வரை இருந்த இந்த ஆட்சியின் போது S. J. V செல்வநாயகமோ அல்லது அமிர்தலிங்கமோ மறந்தாவது பிரஜா உரிமைப் பிரச்சினை பற்றியோ அன்றேல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் பற்றியோ பாராளுமன்றத்தில் ஒரு வார்த்தையேனும் பேசியது கிடையாது.

### தொண்டமானின் அரசியல் இலாபம்

1968, 69 காலப் பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதாரக் கஷ்டங்கட்கு ஆளானர்கள! இதே காலத்தில் உலக நாடுகளில் ஆங்காங்கு பல்வேறு வேலை நிறுத்தங்கள் மேற் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து மலையகத் தமிழ் மக்களும் அரசுக் கெதிராகப் பொது வேலை நிறுத்தத்தில் இறங்கினர். செல்வநாயகம், அமிர்தலிங்கம், தொண்டமான் போன்றோர் UNP உடன் சேர்ந்து அம்மக்களை மேலும் நசுக்கினார்களே தவிர விமோசனத்திற்கு வழி செய்தாரல்லர் மாறாக பல தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திய தொண்டமான், இ.தொ,கா இன் தொழிலாளர் சேமிப்பு நிதியின் மூலம் தோட்டங்களைத் தமது பெயரில் வாங்கி வேலையிழந்த தொழிலாளர்களை அதிலே வேலைக்கமர்த்தினார். இதனால் தொண்டமான் போன்றோர் அரசியல் இலாபம் தேடிக் கொண்டதை அந்த மக்கள் அன்று அறிந்திலர்.

### 'சேகுவேரா' கலவரத் தாக்குதல்.

1970 காலப்பகுதியில தவறான பிரச்சாரங்கள் மலையக தமிழ் மக்களுக்கு எதிராக நாட்டில் மறைமுகமாக இயங்கி வந்த 'சேகுவேரா' இயக்கத்தினால் சிங்கள மக்களுக்குத் திணிக்கப்பட்டன. அதாவது மலைத்தமிழ் மக்கள் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட நிகழ்வானது 'இந்திய தேசிய விஸ்தரிப்பு' ஆகுமென்றும் அவர்களைத் தமது இயக்கத்துடன் இணைத்துக் கொள்வதில்லை யென்றும் பிரச்சாரங்கள் மேற் கொள்ளப்பட்டன. இதனால் சிங்கள மக்கள் வெறி கொண்டு எழுந்து அம்மக்களைத் தாக்கினர். இக்காலத்தில் ஆட்சிகளிலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் கொண்டு வரப்பட்ட 'தோட்டங்கள் தேசியமயமாக்கப் படல்' திட்டத்துக்கமைய அது நடைமுறைப்படுத்தப் பட்ட போதிலும் தோட்டத் தொழிலாளர்கள் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்பட்டதில்லை

### சிவனுலட்சுமணன் 'கொலை

இதைத் தொடர்ந்து 1974 75 காலப்பகுதியில் நாட்டில் கட்டுக்கடங்காத பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இதனால் சர்வதேசக் கடன் வசதிக்காக, நஷ்டம் ஏற்பட்ட தோட்டங்களை மூடும் நிலை ஏற்பட்டது, ஆனால் இதற்கு மாற்று வழியாக அத்தோட்டங்களைத் துண்டு துண்டாகப் பிரித்து தனியாருக்குவழங்க அரசு தீர்மானித்தது. இதனால் தோட்டத் தொழிலாளர் திவலை திவலையாக்கப்பட்டனர். இதன் போதுதான் தோட்டப்பிரிப்பை எதிர்த்த இளைஞன் 'சிவனுலட்சுமணன்' போலீஸ்சால் சுட்டுக் கொல்லப்பட்டான். இவையெல்லாம் இப்போது கேட்பதற்குப் பிரமிப்பாக இருந்தாலும் அப்போதும் தமிழ்ப்பெரும் தலைவர்கட்கோ அல்லது மற்றைய அரசியல் தலைவர்கட்கோ அதிர்ச்சியை ஏற்படுத்த வில்லை. மாறாக அவர்கள் வாய்மூடி மௌனிகளாகவே இருக்க வைத்தன. ஆனால் இதற்க்கெல்லாம் குரல் கொடுத்த பெருமை 'புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்' தையே சாரும். அதனது சிங்கள, தமிழ் வெளியீடுகளில் "தொழிலாளர் சுடப்பட்டார் வேலை நிறுத்தத்தால் பதிலடி!" என்று தலைப்புத்தீட்டி கட்டுரைகள் வெளிவந்தன. இதன் பின்னர் 1976இல் அரசுகளுக் கெதிரான பொது வேலை நிறுத்தம் வெடித்ததால் அரசு வெகுஜன ஆதரவை இழந்தது.

### மலையக மக்கள் பங்களிப்பு

சிறிலங்கா அரசின் இத்தனை ஒடுக்கு முறைக்கு மத்தியிலும். இடையிடையே இனக்கலவரங்கள் வெடித்து அவர்களை அமுக்கும். இவர்கள், அரசின் வரலாற்றுக் கொடுமைகளில் புடம் போட்டு எடுத்த நரட்சிச் சத்திகள்! இவர்கள்தான், உண்மையிலேயே-ஒழுங்கான வர்க்க சிந்தனையுள்ள போராட்டத்தில் குதிக்கவும், அதில் வெற்றி பெறவும் தகுதியுடையவர்கள்!!

இலங்கையின் மத்திய மலைப் பகுதியில் இத்தகைய சிறப்பு மிக்க புரட்சித் தீபம் சுளன்று கொண்டிருக்கிறது.

இப்பேரினவாத அரசினால் நெருக்கடிக்குள்ளாக்கப் படடிருக்கும் தமிழ் பேசும் மக்களின் விடிவானது தமிழ் ஈழ விடுதலை தனிநபர் ஆயுதம் ஏந்துவதால் சாத்தியமாகும் எனபது மூடத்தனமாகும். சக்தி மிக்க மக்கள் ஆயுதப் போராட்டமே இதற்கான ஒரே வழி முதலாளித்துவத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் சிக்காமல் ஒன்றுபட்டு போராடி தமிழ் ஈழத்தை வென்றெடுக்க மலையக மக்களே போராட்டத்தில் முழு பங்களிப்பும் செலுத்துவது உங்களது கடமையாகும்.

www.tamilarangam.net



# யார் எமது எதிரி

**யார் எங்கள் எதிரிகள்? இனக்கலவர காலங்களில் தமிழ்பேசும் இனத்தின் உயிருக்கும் - உடமைகளுக்கும் காலத்துக்குக் காலம் குழிபறிக்கும் அவர்களா? பாராளுமன்றத்தில் தமிழ்பேசும் இனத்திற்கு எதிராக அடிக்கடி தார்மீகக் குரல் கொடுக்கும் அவர்களா? தமிழ் பேசும் இனத்தைப் பூண்டோடு அழித்து விட வேண்டுமென, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பளபளக்கும் ஆயுதங்களுடன் வந்து குவிந்திருந்து அராஜகம் புரியும் அவர்களா? இவர்களுக்கு இக்கொடிய கருவிகளும், ஶ்ரீலங்கா அரசுக்கு 'ஆலோசனைகள்' இரவல் தரும் அவர்களா? யார் எமது எதிரிகள்? இதற்குச் சரியானதும், துல்லியமானதுமான பதிலை ஒவ்வொரு தமிழ்பேசும் மக்களும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது.**

பொதுவாக நோக்கும் போது, இன்றைய சிறிலங்கா அரசுதான் நமது எதிரி! இந்தத் தரகு முதலாளித்துவம் தான், தன்னைச் சிறிலங்காவில் இஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக—மக்களிடத்தே கூடவிருந்து கருவறுக்கவேண்டுமென்பதற்காக—உலகநாடுகளின் மத்தியில் தானும் ஒரு அரசு எனக் காட்டுவதற்காக; சிறிலங்கா அரசு, தனக்குப் பின்னணியில் மிகவும் பலமான சில அணிவகுப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

1 மக்கள் அணிவகுப்பு,

2 இராணுவ அணிவகுப்பு,

3 சர்வதேச அணிவகுப்பு.

என்பவை இவை.

இம் மூன்று அணிவகுப்புகளையும், தமிழ்பேசும் இனம் வென்றாகவேண்டும். இதுவே, தமிழ்பேசும் இனத்தின் விடுதலைக்குச் சரியானதும், முறையானதுமான ஒரு அணுகுமுறையாகவும், முன்னெடுப்பாகவும் இருக்கும்.

## மக்கள் அணிவகுப்பு!-

இலங்கை, தனது அரசியல் வரலாற்றில் இரண்டு முக்கியமான ஆட்சிகளைப் பெரும்பான்மை சமுகத்தினரிடையே ஆதரித்துவந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியுமே அவை. இவ்விரு கட்சிகளும் தமக்குப் பின்னே, பெருமளவு மக்களைக் கொண்ட ஒரு அணியைத் திரட்டி வைத்துக் கொண்டிருக்கும். இவ்விரண்டில் எதுதான் கட்சிக்கு வந்தாலும் தொடரப் போவது ஒரே கதைதான்—தொடர்கதையாக!

## நிச்சயமாக சிங்கள மக்களல்ல.

வளர்ந்துவரும் இந்த முதலாளித்துவத்தில், இலங்கை மக்களிடையே பொருளாதாரப்பிரச் சினைகள். வேலையில்லாப்பிரச் சினைகள், சுகாதாரப்பிரச் சினைகள் என்பன தோன்றுவது இயல்பே! அதாவது, வறுமையின் விளிம்புக்குத் தள்ளப்படும் மக்கட் கூட்டத்தின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கத்தான் செய்யும்,மக்கள் யாரிடம் 'தான் முறையிடமுடியும்? தேர்தல்காலங்களில் அதுசெய்வோம், இதுசெய்வோம்; ஆனையாக்குவோம், பூனையாக்குவோம் என்று வாக்களித்த பிரமுகர்களை அடுத்ததேர்தல் வரை 'ரீவி' இல்தானே காணக் கூடியதாக இருக்கும். சரி, எப்பாடுப்பட்டாவது ஆட்சிப்பீடத்திடம் தங்கள் குற்றுங்குறைகளை எடுத்துக் கூறினாலும் கூட, அங்கு நடந்தவைகள் தான் என்ன? 'நாசூக்கான ஒரு வார்த்தைப் பிரயோகம்' "எல்லாவற்றிற்கும் காரணம் தமிழன் தான்; அவனைத் தொலைக்கவேண்டும்." -அவ்வளவுதான்! குறைகளை முறையிட்ட சிங்கள மக்களுக்குக் கிடைக்கும் ஒரேயொரு வார்த்தை, பாவம், அவர்களும், 'அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழி' தேற்றத்திற்குள் அமைய வேண்டியவர்களாயிற்றே! இப்போது அவர்களுக்கு என்ன சிந்தனை? -"அவனைத் தொலைக்க வேண்டும்" என்னவழி?

காலத்துக்குக் காலம், சிறிலங்காப் பராளுமன்றம். தனது வரலாற்றுப் புகழ் மிக்க 'பட்ஜட்' ஐ வெளியிடும். அது ஏகப்பட்ட துண்டு விழும் தொகைகளுடன் (இம்முறை 2300 கோடி ரூபாய்) பரபரப்பாக வெளிவரும், மக்கள் கண்கள் கேள்விக்குறி காட்டியவுடன் அரசு எதைச் சுட்டிக்காட்டுகிறது? அந்த இரண்டு திசைகளையும் தான்! வடக்கு-கிழக்கு; தமிழ் பேசும் இனம்; இன்னும் லேற்றஸ்ற்'றாக "கொட்டியா" (புலிகள்) என்று பதில் சொல்கிறது அரசு!

'பட்ஜட் வந்த கையுடன் அந்தக் துண்டுவிழும் தொகையையுப் சமாளிக்கவேண்டுமே! அதற்காக ஒரு தடவை ஈழத்து நிலம் செங்குருதி குடிக்கும் — இனக்கலவரம் வெடித்து ஓய்ந்துபோகும். துண்டு விழும் தொகை சமாளிக்கப்பட்டு விடும்.

தேர்தலில் வெற்றியீட்டி—ஒரு கட்சி ஆட்சிக்கு வருகின்றதென்றால் அது நிச்சயமாகச் சிங்கள மக்களுக்கு நிறைய நிறைய வாக்குறுதிகள் கொடுத்திருக்கும். "24 மணி நேரத்துக்குள் சிங்கள மொழியை ஆட்சி மொழியாக்குவேன்", இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடாக்கித் தருவேன். அனேகமாக இவற்றினால்தான், அந்தக் கட்சி ஆட்சிக்கு வந்திருக்கமுடியும். ஆட்சிக்கு வந்தவர்கள் வெற்றித் திளைப்பைக் காட்ட வேண்டாமா? அதற்காக ஒரு தடவை தமிழ் ஈழம், மக்களின் குருதியால் குளித்துக் கொள்ளும்! மீண்டும் ஒரு இனக் கலவரம்!!

இவ்வாறுதான் சிங்களமக்கள் மாற்றப் பட்டிருக்கிறார்கள் சிறிலங்கா தரகு முதலாளித்துவ அரசின் கீழ், அணிவகுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அரசோ மக்களைச் சிந்திக்க விடாமல், சாட்டுக்கள் சொல்லிக் கொண்டு சிங்கள மக்களைத் தமிழ்பேசும் மக்களுக்கெதிராக, வளர்த்துக் கொண்டிருக்கின்றது. எதற்கெடுத்தாலும், இனவாதம் கக்கிக்கொண்டு, சிங்கள மக்களைத் தமிழ்பேசும் மக்களுடன் ஒட்டவிடாமல் எட்டி நிற்க வைக்கின்றது. இதனால் தற்போது நாம் முன்னெடுத்திருக்கும் போராட்டவடிவங்கள், முன்னெடுப்புக்கள் அனைத்தும் அவர்கள் பார்வைக்குச் சகிக்கப் போவதில்லை என்பது உண்மைதான்!

## இராணுவ அணிவகுப்பு :

எந்த அரசும், தனது அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பக்கபலமாக ராணுவ அணிவகுப்பொன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கும், மக்கள், அரசின் பொருளாதாரத் திட்டங்கள், அரசியற் திட்டங்கள், என்பவற்றால் வலுவாகப் பாதிக்கப்பட்டுக் கிளர்ந்தெழும்போது அப்படியே தட்டி மடக்கி வைத்துக் கொள்ளும் இந்த ராணுவ அணிவகுப்பு!

ஒரு அரசின் கீழ் வளரும் இராணுவ அணிவகுப்பானது மிதமிஞ்சிய தேசப்பற்றுடன் வளர்க்கப்படுகின்றது. தமது மக்கள்; தமது நாடு; தமது உடமைகள் என்றால் அந்நாட்டு இராணுவம் அங்கு தலைநீட்டியேயாக வேண்டும். அரசு எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதனை அப்படியே செய்து முடிக்கவேண்டும். இங்கு உருவாவது முதலாளித்துவ இராணுவம், இதற்கும், தானாகச் சிந்திக்கும் அந்த அத்தியாயங்களுக்கும் வெகுகாத தூரம். இங்கு அத்தனை பெரிய எண்ணிக்கையான இராணுவ வீரர்களினதும் தலைமை ஆளி (Main Switch) அரசுக்குள்ளே முடங்கியிருக்கும். அரசை எதிர்த்துவரும் எந்த சக்திக்கெதிராகவும் இராணுவம் துப்பாக்கி நீட்டவேண்டும். அதுதான் அவர்களது கடமையாக வரையறுக்கப் பட்டிருக்கும். மறுபேச்சின்றிக் 'கறியவுட்' பண்ண வேண்டியது தான்! -இவ்வாறுதான், முதலாளித்துவ அரசின் கீழ் வளரும் அந்த ராணுவம் பேணப்படுகின்றது. ஒரு இராணுவ அணிவகுப்பாக, அரசின் பின்னாலேயே சுற்றிக்கொண்டு திரிகின்றது.

உலக நாடுகளில் இதுவரை தோன்றியுள்ள - தோன்றி வருகின்ற விடுதலை இயக்கங்கள் அனைத்தும் சும்மா "பகிடி" க்காகத் தோற்றுவிக்கப்பட்டவையல்ல! இந்த முதலாளித்துவ அரசுகளின் நெருக்கடி தாளாமல், ஒடுக்கப்பட்டுவரும் மக்களின் பூரண ஒத்துழைப்புக்களுடன் தான் தோன்றி அவை, அம்மக்களின் விடுதலைக்காகத் தமது உயிரையே பணயம் வைத்துப் போராடுகின்றன. முக்கியமாக, இப்படியான போராட்டங்களை முளையுடன் கிள்ளியெறிய அரசு எவ்வளவோ, முயன்று பார்த்து விட்டுத் தோற்றுப் போகும். ஏனெனில், இது மக்கள் ஆதரவுடன் தொடக்கப்பட்டு; மக்களோடு மக்களாக நின்று; மக்கள் ராணுவம் தொடங்கியிருக்கும் - தொடர்ந்திருக்கும் இப்போராட்டங்களை வென்று விடுவதென்றால் அரசுக்குப் பின்னே அணிவகுத்து நிற்கும் ஆயிரமாயிரம் ராணுவ வீரர்களும் அந்த முயற்சியில் மண்கௌவுதல் தான் சாத்தியம்!

எனவே, இவ்வகையான இராணுவ அணிவகுப்பை, தமிழ்பேசும் இனம் பலமான ஒரு மக்கள் இராணுவத்தினால்தான் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டியுள்ளது.

ஏனென்றால், இந்த அரச ராணுவத்தினருக்கு – அவர்களது பாசறையில் அடிக்கடி என்ன சொல்லப்படுகின்றது?" எந்தவொரு துப்பாக்கிரவையும் தமிழனின் குருதி சுவைக்காமல் வீணாகக் கூடாது."

இதனை எதிர்த்து மக்கள் இராணுவம் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் அரசின் கண்களுக்குப் "பயங்கரவாதங்கள்" ஆகத் தென்படுகின்றன. சிறிலங்கா அரசு தற்போது தமிழ்பேசும் இனத்தின்மீது கடைப்பிடித்து

(5ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கிலிருந்து, பயங்கரவாதத்தை விரட்டியடிக்க ஶ்ரீலங்கா அரசின் 3கட்டத்திட்டம்.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதியில்— இழந்துவிட்ட தமிழ் பேசும் இனத்தின் இறைமையை மீளப் பெறும் பொருட்டுப் போராடும் தமிழீழ விடுதலைப் போராளிகளை ஶ்ரீலங்கா அரசு பயங்கரவாதிகள் எனவும், விடுதலைப் பாதையில் போராளிகள் நிகழ்த்தும் அதிரடிகளைப் பயங்கரவாத நடவடிக்கைகள் எனவும் ஶ்ரீலங்கா அரசு வர்ணிக்கின்றது.

'பயங்கா வாதத்தை' நாட்டிலிருந்து விரட்டியடிக்க வேண்டுமென்பதற்காக ஶ்ரீலங்காக அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக, 11-12-84 அன்று 200க்கும் மேற்பட்ட மகாசங்கத்தினர்கள் ஜனாதிபதிஜெயவர்த்தனேயையும், தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியையும் சந்தித்த போது கூறப்பட்டது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 3 கட்டத்தை உள்ளடக்கியது.

1. பயங்கரவாதிகளுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தல்.
2. வெகுஜன சாதனங்கள் மூலம் உண்மை நிலையை உலகுக்கு உணர்த்தல்.
3. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை உருவாக்குதல்.

ஶ்ரீலங்கா அரசு ஒரு பௌத்த அரசாக இருந்தும் கூட, இந்த ஆயுதப்போராட்டத்தைத் தவிர்க்க முடியாதவாறு தொடர வேண்டியுள்ளதெனக் கூறப்பட்டிருக்கின்றது.

அதாவது இதன்மூலம் அறியக் கூடியதாவது, ஶ்ரீலங்கா இராணுவம் இவ்வளவு காலமும் ஆயுதமேந்தி விடுதலைப் போராளிகளை அடக்கவில்லை என்றும் அத்தோடு அவர்கள் அப்பாவிப் பொது மக்களை எப்போதும் தாக்கவில்லை எனவும் புத்த தருமப் தாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

வெகுஜன சாதனங்கள் மூலம், ஶ்ரீலங்கா அரசு சொன்ன உண்மைகள் வாசகப் பெருமக்களுக்கு நன்கு ஞாபகமிருக்கும். அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை. சிறிலங்கா 'றேடியோ' — உண்மை சொல்லாது என்றும் வெளியுலகுக்கு நன்றாகத் தெரியும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றைக் காண வேண்டுமென்பதற்காக பெரிய ஆர்ப்பாட்டமாக வட்டமேசை மாநாடு ஒன்று கூட்டப்பட்டு இன்றுவரை, மாநாட்டில் எந்தவிதமான தீர்வுகளும் உருப்படியாக எடுக்கப்படவில்லை.

எனவே சிறிலங்கா அரசு, தமிழ் பேசும் இனத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, எடுத்திருக்கும் மூன்று கட்ட வேலைத்திட்டங்களிலும், இப்படி ஓட்டைகள் உள்ளபோது. தமிழ் பேசும் இனத்தின் பிரச்சினைகள் இவர்களால் தீர்த்து வைக்கப்படுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று எல்லோர் வாயிலும் அடிபடும் 'இஸ்ரேல்' எனப்படுவது, அன்றைய பாலஸ்தீனம்! இது 1948ம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் பாலஸ்தீனிய அராபியரின் தாயகமாகத் தலை நிமிர்ந்து நின்று - பாலஸ்தீன மக்களின் இறைமைகளைப் பிரதிபலித்துக் கொண்டு நின்றது.

பண்டைக்காலத்தில் இலங்கையில் தமிழ் பேசும் இனத்தின் பாரம்பரிய பிரதேசங்களாக இருந்த வடக்கு, கிழக்கு மாகாணப்பகுதிகள் சிங்கள மக்களால், ஸ்ரீலங்கா - அரசின் ஆதரவுடன் ஆக்கிரமிக்கப்பட்டது போன்று பாலஸ்தீனியரின் பாரம்பரிய பிரதேசமாகிய பாலஸ்தீனம், யூதர்களினால் பிரிட்டிஸ்ஸாரின் ஆதரவுடன் ஆக்கிரமிக்கப்பட்டதைத் தொடர்ந்து - பாலஸ்தீனியரின் வாடையே அந்த நாட்டிற்குள் வீசக் கூடாது என்பதற்காக, அந்நாட்டின் பெயரையே மாற்றி, 'இஸ்ரேல்' என்ற பெயருடன் இப்போது அமெரிக்க அரசின் அடியாளாகவும், உலக நாடுகளிடையே கிடைத்த பலத்த கண்டனங்களையும் காவிக்கொண்ட 'மொஸாத்' எனும் உளவு ஸ்தாபனத்தையும் வைத்துக் கொண்டுள்ளது.

பாலஸ்தீனிய மக்கள் தங்கள் இறைமையை தாய்நாட்டை மீளப்பெறும் பொருட்டு. அன்று முதல்- இன்றுவரை போரிட்ட வண்ணமும் இருக்கின்றனர். வல்லரசுகளின் பயங்கர ஆயுதங்கள் 'இஸ்ரேல்' படைகளின் கைகளில் தவழ்ந்து பாலஸ்தீன விடுதலைப் போராளிகளுக்கு முன்னே பலமுறை நீண்டு பயமுறுத்தி வருவதனாலும், அந்த வல்லரசுகளின் பயங்கரவாதத்துக்குச் சார்பான தீவிர உதவிகளினாலும் இன்று, இடையிலே தோன்றிய 'இஸ்ரேல்' இன்னும் உயிருடன் இருக்கின்றது. இல்லையென்றால், இன்று மீண்டும் 'பாலஸ்தீனம்' உலக நாடுகளில் உதித்து ஒளிவீசியிருக்கும்! இப்போதுமட்டுமென்ன? மக்கள் சக்திக்கு முன்னே எந்த சதிகாரச் சக்திகளும் வாலாட்ட முடியாதென்ற அடிப்படையில், சர்வதேச பயங்கரவாதத்தால் இன்று அனைத்து நாடுகளிலும் கொதித்தெழுந்திருக்கும் மக்கள் சக்தியின் மகிமை துலாம்பரமாகும் நாள் வெகுதொலைவில் இருக்காது. இனித் தொடர்வோம், ...



பி. எல். ஓ. தலைவர்
—ஜஸீர் அரபாத்—

# விடுதலைப் பாதையில் பாலஸ்தீனம்

யூதர்களால் துரத்தியடிக்கப்பட்ட பாலஸ்தீனமக்கள், சீனு, எகிப்து, குவைத், சவூதி அரேபியா, ஜோர்டான் போன்ற பகுதிகளில் தஞ்சமடைந்தனர். 1982இல் எடுக்கப்பட்ட ஒருகணக்கெடுப் பின்படி, இவ்வாறு தஞ்சமடைந்த அகதிகளின் எண்ணிக்கை 44, 49, 229ஆக இருந்தது. இப்போது, பாலஸ்தீனமக்களின் தாயகமான பாலஸ்தீனம், 'ஸ்ரேல்' ஆக மாறியிருக்கிறது.

யூதர்களின், இவ்வாறான படிப்படியான ஆக்கிரமிப்புக்களை எதிர்த்து 1948, 1967ம் ஆண்டு காலப்பகுதிகளில், எகிப்து, ஜோர்டான், சிரியா ஆகிய அராபிய நாடுகள் — பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காக — அவர்களின் இறைமைக்காகப் போராடித் தோற்றுப்போனதுமல்லாமல் ஜோர்டானின் ஒரு பகுதியையும் இழக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு தனது தாய் நாட்டிலிருந்தே துரத்தப்படும் இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்குப் பாலஸ்தீனமக்கள் தள்ளப்பட்டமைக்கும், அதனை எதிர்த்துப் போராடிய அராபிய நாடுகளின் தோல்விக்கும் காரணமாக யூதருக்கு மிகவும் பலம் பொருந்திய பின்னணி இருந்தது. இப்போது பயங்கரவாதம்! அககிரமம்! மனிதாபிமானமற்ற செயல்! என — தமிழீழ விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளுக்காக — ஸ்ரீலங்கா அரசுக்காக வாய்காட்டுகின்றதே சர்வதேச பயங்கர வாதிகளின் தலைமைப் பீடமாகவும், உலகநாடுகளை அழிவின் எல்லைக் கோட்டுக்குத் தள்ளிக் கொண்டு போகும் அபாய நிலையின் பீடாதிபதியுமான அமெரிக்க, பிரிட்டிஸ் ஏகாதிபத்தியங்கள் — இவைதான், அன்று பாலஸ்தீன மக்கள் — யூதர்களால் துரத்தியடிக்கப்பட்ட போது அழித்தொழிக்கப்பட்ட போது அதற்குத் துணை நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இப்போது மனிதாபிமானம், அக்கிரமம், பயங்கரவாதம் பற்றிக் கதைக்க வெளிக்கிட்டிருக்கின்றனர் அரங்குக்கு! வேடிக்கையாய் இல்லை!! என்ன — அமெரிக்காவின் அதிபயங்கரமான கொடுமையான வரலாறுகள் உலக மனித இனத்தின் உள்ளத்தில் இருந்து அகன்று விட்டதாகவோ அல்லது மறைத்துவிடலாமோ என்று நினைப்போ? இப்போதல்லாவிட்டாலும், எப்போதென்றாலும் — இதற்கு உலகமக்கள் பதிலடி கொடுக்கத்தான் போகின்றார்கள்.

பிரிட்டிஸ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் இந்த ஆக்கிரமத்துக்குத் துணை போய்க் கொண்டிருந்தன.

1958இல், யூதர்களின் ஆக்கிரமிப்பை எதிர்க்கவும், தங்கள் தாயகத்தை மீட்கவும் 'அல்ஃபதா இயக்கம்', எகிப்தில் தொண்டர் படையாக, ஏறக்குறைய் 6000 இளைஞர்களை உள்ளடக்கியதாக உருவானது. இதற்கு 'ஜசீர் அரபாத்' தலைமை வகித்தார். இவர் ஒரு பொறியியலாளர், எகிப்தில் கல்வி கற்று, பின்பு கொரில்லாப்பயிற்சி பெற்றவர்.

1960 இல், மக்கள் முன்னணி, அரபு முன்னணி என்ற இரு அமைப்புக்களும் தோன்றின. 1964 இல் இவ்வியக்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து 'பாலஸ்தீன விடுதலை இயக்கம்' (Palastien Liberation-Organization) ஆக (P. L. O) உருவெடுத்தது. இதற்கும் 'ஜசீர் அரபாத்' ஏகமனதாகத் தலைவரானார். 1967 இல், 'சைகுவா' என்ற ஸ்தாபனமும், பாலஸ்தீன விடுதலை ஜனநாயக முன்னணியும் இதில் இணைந்து கொண்டன.

1968இன் பின்பு PLO, ஜோர்டானில் இருந்து செயற்படத் தொடங்கியது. 1970இல், ஒரு பாலஸ்தீனப் பெண்மணி (இவர் ஒரு விரிவுரையாளர்) விமானக் கடத்தல் ஒன்றின் மூலம் PLOக்குப் பெருமை தேடித் தந்தார்.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து — முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராட்டத்தை ஆரம்பித்த PLO, தங்கள் கொள்கையடிப் படையில், ஜோர்டான் மன்னர் 'ஹூசைன்' இன் முடியாட்சிக்கெதிராகப் புரட்சி வேலைகளில் ஈடுபடத் தொடங்கினர். இதனால், இவர்கள் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டனர். ஜோர்டானிலிருந்து வெளியேற்றப்பட்ட இவர்கள், லெபனானின் 'பெய்ரூட்' பகுதியில் இருந்து கொண்டு தங்கள் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். அங்கு ஸ்ரேலியரின் ஆக்கிரமிப்புக்கள் அதிகரிக்க, அங்கிருந்து 'டூனிஸியா' வுக்குச் சென்று இப்போது அங்கிருந்து கொண்டே தங்கள் தாய் நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றனர்.

## PLO - சர்வதேச அரங்கில் பெற்ற முக்கியத்துவம் :-

1974 இல் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது PLO. போராட்டத்தை 105 நாடுகள் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டன. 1975— நவம்பர் - 10இல் PLO தலைவர் ஜசீர் அரபாத்துக்கு ஐ. நா. வில் உரையாற்றும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஐ. நா. வில் அங்கம் வகிக்கத் தொடங்கியது.

1976 இல், அணிசேரா இயக்கத்திலும் PLOக்கு இடமளிக்கப்பட்டது. 'உங்டாட்' நிறுவனத்திலும் PLOக்கு அங்கத்துவமுண்டு, அத்தோடு 70 நாடுகளில் PLO க்குத் தூதரகங்கள் உள்ளன. இவ்வாறு PLO - சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் கொண்டு விளங்குகின்றது.

1977 இல் ஸ்ரேலில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியுடன் PLO இனர் உரையாடி, தமது நிலைப்பாட்டை அவர்களுக்கு எடுத்துரைத்தனர். ஆனால் அங்கு முன் வைக்கப்பட்ட சில தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை. இதைத் தொடர்ந்து எகிப்தும், ஸ்ரேலும், ஐக்கிய அமெரிக்காவினூடாக, 1979 இல் 'காம்டேட் விட்' என்ற உடன்படிக்கையை மேற்கொண்டது. இதில் 3 தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

1. எகிப்து ஸ்ரேல் இடையே இனிபோரில்லை.

2. 'சீனாய்' பகுதியில் இருந்து ஸ்ரேல் வெளியேறல்.

3. பொருளாதார வழிகளில் பரஸ்பர ஒத்துழைப்பு.

இத்தகைய தீர்மானம் கொண்டு வரப்பட்ட இந்த நாள், பாலஸ்தீனமக்களுக்கு இத்தகைய தீர்மானம், PLO இன்போராட்ட நடவடிக்கைகளுக்கும், அரபு நாடுகளுக்கும் முற்றிலும் முரணானதாகும். இதுபற்றி 1979 இல் ஜசீர் அரபாத் விவரிக்கையில் 'இது ஒரு போலிச் சமாதான உடன்படிக்கை என்றும் அதன்விளைவு அரபு நாடுகளையும், PLOஐயும் அடிமையாக்கும் ஒரு செயல் எனவும் கண்டனம் தெரிவித்தார்.

1. அரபு நாடுகளிடையேயுள்ள முடியாட்சித் தன்மைக்கும், ஏகாதிபத்திய, முதலாளித்துவத் தன்மைக்கான PLO இன் எதிர் நடவடிக்கைகளுக்குமிடையே பலமான முரண்பாடுகள் காரணமாக PLO வினர், தீவிர கொரில்லாப் போராங்களை 'ஸ்ரேலுக்கு' எதிராக நடத்திய போதும், பூரண ஒத்துழைப்பு அரபு நாடுகளிடமிருந்து கிடைப்பதில்லை.

(10 ம் பக்கம் பார்க்க)



இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொக்கிளாய் நாயாறு சம்பவமும் இதன் சூத்திரதாரிகள் நிலை...

பிரிட்டிஸ் காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டு இருந்த நாள் தொடக்கம் இலங்கையின் அரசு உரிமையை பெற்று இருந்த பிரபுத்துவ அரசானது அன்றில் இருந்து இன்றுவரை தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக பற்பல வடிவங்களில் ஒடுக்குமுறையை நிகழ்த்திக் கொண்டு வருகிறது. அவ்வடிவங்கள் ஆனவை தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்டு குடியேற்றுவதும் காலத்துக்கு காலம் தூண்டிவிடும் இனக் கலவரங்களும் ஆகும்.

இவ்வரசின் இனவாத் நடவடிக்கையினுல் நாளும் அல்லலுற்றுக் கொண்டிருக்கும் தமிழ்பேசும் மக்கள் அரசின் இனவெறி செயல்களை தெளிவாக புரிந்துகொண்டு ஒடுக்குமுறை விலங்கொடிக்க தமிழீழம்பெறுவதே தம்முன் உள்ள ஒரே பணி என உணர்ந்து தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர்,

தமிழ் பேசும் மக்களின் இத்தீவிரமான செயற்பாடுகளை நசுக்கும் முகமாக சிறிலங்கா அரசு தனது வெறிபிடித்த ராணுவத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இவ்வரசு ராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் பேசும் மக்கள் மேல் வன்முறை நிகழ்த்திக் கொண்ட, மறுபுறம் நில ஆக்கிரமிப்பு கொள்கையை துரிதப் படுத்திக் கொண்டிருக்கிறது.

இப்பேரினவாத அரசின் இன ஒடுக்கல் நடவடிக்கைகளுக்கு மேலும் மேலும் தூபமிட்டுக் கொண்டிருக்கின்றனர் தனிநபர் குழுவினர்.

சிறிலங்கா பேரினவாத அரசின் திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளின் பகுதியாக முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ளதும் முல்லைத் தீவுக்கு தெற்கேயும் திருகோணமலைக்கு வடக்கேயும் உள்ள கொக்குளாய், நாயாறு ஆகிய மீன் பிடி கிராமங்களில குடியமர்த்தப்பட்டிருந்த சிங்கள மீனவர்கள் மேல் ஆயுதம் தரித்த குழுவினர் நடத்திய தாக்குதலில் 54 பேர் கொல்லப்பட்டனர்.

பின் விளைவுகள் பற்றி தீர்க்கமாக ஆராயப்படாமல் எடுத்த இத்தாக்குதல் ஆனது வெறும் வாயை மென்று கொண்டு இருந்த அரச பிரச்சார பீரங்கிகளுக்கு அவல் கிடைத்தாற்போலவும் தமிழ் பேசும் மக்களை அழித்தொழிப்பதற்கு சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருந்த அரசுக்கு தொடர்ந்து நடத்த முடியாமல் கைவிடப்பட்ட இத்தாக்குதல் ஆனது மிகவும் சாதகமான ஓர் சந்தர்ப்பமாகி விட்டது.

உலக நாடுகளுக்கு தமிழ் ஈழ விடுதலை வேண்டி போராடும் தீவிரவாத இளைஞர்களை பயங்கரவாதிகள் என வர்ணித்து கொண்டிருக்கும் அரச பிரச்சார பீரங்கிகள் இச்செயல் மனிதாபிமானம் அற்றதும், தண்டிக்கத் தக்கதும் என முழங்கின. அமெரிக்காவும் கூட இச்சம்பவத்துக்கு அனுதாபம் தெரிவித்து இருந்தது

பல இன மக்களை பூண்டோடு அழித்தும் பல நாடுகளில் கொடிய வலிய கரங்களை நீட்டி, மனிதவதை நிகழ்த்த முகாம் இட்டுக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவும், சர்வதேச பயங்கரவாதிகளை தன்னகத்தே கொண்டுள்ள சிறிலங்கா அரசின் புலம்பல்களையும் மனிதநேயம் மதிக்கும் நாடுகள் செவி மடுக்காது என்பதில் யாதுமோர் ஐயமும் இல்லை. ஆனுலும் தனிநபர் குழுவினரால் மேற்கொண்ட இத்தாக்குதல் நிகழ்ச்சி இக் காலத்துக்கு உகந்ததா? என்பதே நம்முன் உள்ள கேள்வியாகும்.

தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி அவர்களை பூண்டோடு அழித்து பௌத்த சிங்கள குடியரசாக மாற்றும் முயற்சிக்கு சந்தர்ப்பங்களை தேடிக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசுக்கு இச்சம்பவம் ஒரு வரப்பிரசாதமாகும்.

இக்காலத்துக்கு ஒவ்வாத இந்நடவடிக்கையை இக்குழுவினர் இந்நேரம் கையாண்டதின் மர்மம்தான் என்ன ?

தங்களால் மேற்கொண்ட தாக்குதலை வெளியில் சொல்ல துணிச்சலற்ற இக்குழுவினர் அப்பகுதிகளிலிருந்து இராணுவத்தை அகற்றிவிட முயலாதது இவர்களின் செயல் திறமையின்மையையே பிரதிபலிக்கிறது. இவர்களின் இந்நிலைப்பாட்டை மக்கள் அறிவர் என்பதில் ஐயமில்லை.

பல இனக் கலவரங்கள் வெடித்த நேரமும், அரச ராணுவத்தின் வெறிச்செயல்களால் தமிழ்பேசும் மக்கள் செத்துக் கொண்டிருந்த நேரமும், தமிழ் ஈழப் பகுதிகளை சிறுகச் சிறுக திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் ஆக்கிரமித்து கொண்டிருந்த நேரமும், எடுக்கப்படாத இத்தாக்குதல் இப்பொழுதுதான் இவர்களுக்கு தேவை வந்து விட்டதா ? அன்று இவர்கள் செய்யாததன் காரணம்தான் என்ன ?

சிறிலங்கா பேரினவாத அரசானது கொக்குளாய் நாயாறு சம்பவத்தின் எதிர் விளைவாக, பாரதூரமான பெரும் விளைவுகளை கொடுத்துள்ளது அதன் சாரம்சம் ஆனது தமிழ் ஈழ கடற்கரையோர பகுதகளான மன்னார் தொடக்கம் முல்லைத் தீவு வரை மனித நடமாட்டம் அற்ற சூனிய பிரதேசமாக மாற்றி உள்ளது. இதனுல் அங்கிருந்த 5000 தமிழ் பேசும் குடும்பங்கள் தமது சொந்த மண்ணிலிருந்தே விரட்டப்பட்டு அகதிகள் ஆக்கப்பட்டு தமது வாழ்க்கைக்கு உத்தரவாதமற்ற நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் மீன் பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்தவர்கள் ஆவர். இன்று வறுமைக் கோட்டின் கீழ் படுபயங்கரமாக தள்ளப்பட்ட இம்மக்களின் நிலை மிகவும் கவலைக்கிடமானது.

சிறிலங்கா அரசு இக் குழுவின் செய்கையால் சூனியமாக்கப்பட்ட பகுதிகளில் சிங்கள மக்களை குடியமர்த்துவதில் துரிதமாக ஈடுபட்டு வருவதுடன் அம்மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் இல்லை என சாட்டாக கூறிக்கொண்டு, அப்பகுதிகளில் ராணுவத்தை குவித்துக் கொணடும சிங்கள மக்களுக்கு ராணுவ பயிற்சி அளித்தும் நவீனரக ஆயுதங்களையும் வழங்கி உள்ளது.

இனவாத அரசின் ராணுவ குவிப்பு நடவடிக்கையும் சிங்கள மக்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பும தமிழீழப் போராட்டத்தை நசுக்கவும், தமிழ் ஈழ மக்களை பூண்டோடு அழிக்கவும் திட்டமிட்ட ஒரு நடவடிக்கையே அன்றி வேறல்ல, என்பது வெளிப்படையாகும்

அரசானது சிங்கள மக்களின் சிந்தனையில் இனவாத கருத்துக்களை தூவிவிட்டு, ஆயுதம் கொடுததுள்ளதின் விளைவு தமிழ் ஈழப் பகுதிகளில நித்தமும் கொலை, கொள்ளை சமபவங்கள் அதிகரித்துள்ளது துரதிர்ஷ்ட நிகழ்ச்சியாகும்.

விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கிறோம் என சொல்லிக் கொண்டிருக்கும் இக்குழுவினர். உண்மையில் மக்களின் விடுதலையை நாடுகிறார்களா ? என்பது சந்தேகத்துக்கு உரியது. ஏனெனில் இக்குழுவினரால் இவ்வளவு காலம் எடுக்கப்பட்ட ஒவ்வொரு தாக்குதல் நடவடிக்கைகளும் தமிழ் பேசும் மக்களை அழிவுப் பாதைக்கு இட்டு சென்று கொண்டிருந்தது என்பது மறுக்க முடியாததும், மறைக்க முடியாததுமாகும்.

அக்கிராமத்தில் உள்ள தமிழ் பேசும் மக்களை பாதுகாக்காத இவர்களா தமிழீழ மக்களை பாதுகாக்கப் போகிறார்கள்?


தமிழ் பேசும் மக்களை இக்கட்டான சூழ்நிலைமைக்குள் தள்ளிக் கொண்டிருக்கும் சிறிலங்கா பேரினவாத அரசுக்கு துணை போவதிலேயே கண்ணும் கருத்துமாய் உள்ள பிற்போக்கான இக்குழுவினரை மக்கள் இனங்கணடு ஒதுக்குவதுடன மக்கள் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தான் தமிழீழ விடுதலை வென்றெடுக்க முடியும் என்ற கொள்கையில் தவறாது செயல்படும் தமிழீழ விடுதலை இயககத்துக்கு பூரணமாக உங்கள் பங்களிப்பைச் செலுத்துங்கள்.

## விடுதலை விரும்பிகளுக்கு நன்றி

ஏகாதிபத்தியத்தின் அழுகிய கரங்களால் ஆதரவைபெற்று அநியாயக் காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசுக்கு எதிராக எமது மக்கள் அணிவகுப்பும், ஆயுத எழுச்சியும் ஓங்கியுள்ள, இவ்வேளையில் நிதியின் தாக்கம் எம்மை கலக்க முற வைக்காமல், ஆதரவை மனங்களில் வைத்திருந்தவர்கள் இன்று கரங்களில் தந்துதவுவதால், இடையூறுகளைக் களைந்து விடுதறையை நோக்கி விரைந்து செல்லக் கூடியதாயிருக்கிறது.

உலகில் உள்ளஒடுக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களும், அனைத்துத் தமிழ் மக்களும் தமிழீழ விடுதலையை எதிர்பார்த்திருக்கின்றனர்

இவர்களின் ஆதரவினால் தமிழீழ மக்களின் இதயங்கள் மகிழ்ச்சி அடைகின்றன. இவ் விடுதலை விரைவுக்கு நிதியுதவி செய்த விடுதலை விரும்பிகளுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினர் தமிழீழ மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.




ரெலோஸ்களின் போராட்டம் பற்றி தமிழீழம் எங்கும் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள்.

## இராணுவ மந்திரி உஸ்னேவ் மரணம்

ரஷியாவின் புதிய ராணுவ மந்திரியாக 73 வயதான ரொகோலோவ் நியமிக்கப்பட்டு உள்ளார்.

ரஷியாவில் இதுவரை ராணுவ மந்திரியாக இருந்த உஸ்னேவ் கடந்த 20-12-84 வியாழக்கிழமை மரணம் அடைந்தார்.

அவருக்கு பதிலாக புதிய ராணுவ மந்திரியை தேர்ந்தெடுக்க ரஷிய கம்யுனிஸ்டு கட்சியின் தலைமைக் குழு (பொலிட் பீரோ) நேற்று கூடியது.

கூட்டத்தில் தற்போது துணைராணுவ மந்திரியாக இருந்து வரும் ரொகோலோவை புதிய ராணுவ மந்திரியாக நியமிப்பது என்று ஏக மனதாக முடிவு செய்யப் பட்டது.

அதன் படி ரொகோரோவ் ராஷியாவின் ராணுவ மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

சொகோலோங் 1911ம் ஆண்டு ஏழைதொழிலாளியின் குடும்பத்தில் பிறந்தார். தனது 21 வதுவயதில் ரஷிய ராணுவத்தில் ரோந்தார். 2 வது உலகப் போரியின் போது ஆயிதப்படை 'பிரிவுக்கு தளபதியாக இருந்து எதிரிகளை முறியடித்தார்.

1837 முதல் ரஷிய கம்யுனிஸ்டு கட்சியில் உறுப்பினராக ரோர்ந்து பணியாற்றினுர். ராணுவத்தில் பல்வேறு பதவிகளை வகித்த அவர் கடந்த 1973 ம் ஆணடு முதல் ராணுவ துணை மந்திரியாக இருந்து வந்தார்.

அத்தோடு ரஷிய கம்யுனிஸ்டு கட்சியின் துணைத் தலைவராகவும் மத்திய கமிட்டி உறுப்பினராகவும் இருந்து வருகிறுர்.

## தமிழக மீனவர்கள் அவலநிலை

ராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்க சென்ற இந்திய மீனவர்களை இந்திய கடல் எல்லை அருகே இலங்கை கடற்படை தாக்கி வருவதை யாவரும் அறிந்ததே. இன் நிகழ்ச்சிகளை இட்டு சுமுகமாக்கப்பட இந்திய கடல் படைக் கப்பல் இராமேஸ்வரம் கடலில் நிறுத்தப்பட்டு இருந்தது. அக்கப்பல்நிறுத்தப் பட்டபோதும் இரண்டாவது தடவையாக தாக்கி உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரைசேர்ந்த ஜமால் என்பவரின் விசைப்படகு கடந்த செவ்வாய்க் கிழமை இந்திய இலங்கை கடல் எல்லைப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தது. அப்போது இலங்கை கடற்படையை சேர்ந்த சிறுகப்பல் இந்திய கடல் பகுதிக்குள் நுழைந்தது.

இலங்கை கடற் படைக் கப்பலைக் கண்ட மீனவர்கள். தங்களது விசைப்படகை இராமேஸ்வரம் நோக்கி விரைவாக செலுத்தினர். இதைக் கண்ட இலங்கை கடற்படையினர் இயந்திரதுப்பாக்கியால் சுட்டனர். மீனவர்கள் விசை படகின் உள் மறைந்து கொண்டனர், பின் இலங்கை கடற் படைக் கப்பல் இலங்கை கடல் எல்லைக்குள் சென்று விட்டது.

இச்சம்பவத்துக்குப் பின் மீனவர்கள் கரைவந்து சேர்ந்தனர். இலங்கை கடற்படை சுட்டது பற்றியும் தாங்கள் கொண்டதால் உயிர் தப்பியதாகவும் மீனவர்கள் சங்கங்களிடம் புகார் செய்து கொண்டனர்.

# செய்திகள்



### * யாழ்நகரில் மேலும் 65 இளைஞர்கள் கைது.

(07.12.1984)

பாதுகாப்புப் படைகளினால் யாழ்குடாநாட்டில் இருந்து 65 தமிழ் இளைஞர்கள் சிறைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். பருத்தித்துறையில் இருந்து 3 கி. மீ தொலைவில் உள்ள 'மந்திகை' அரச வைத்தியசாலைக்குச் சொந்தமான 'அம்பூலன்ஸ்' ஒன்று போராளிகளால் கடத்தப்பட்டது.

### * கொழும்பில் கோரக்கொலை.

(07.12.1984)

கொழும்பில் ஒரு தமிழர் காலை 10.30க்கு ஒரு சிங்களவரால் குத்திக் கொலை செய்யப்பட்டார். தமிழர்களிடையே, அவர்களது வீடுகள் தேடப்படுவதனால் பீதி பரவியுள்ளது. மாளிகாவத்தை - லேக்ஹவுஸ் நிருபரான கணேசன் என்பவர் தேடப்பட்டு, 2 தமிழ் வாலிபர்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார். கணேசன் பின்பு விடப்பட்டார்.

### * மலையகத்தில் கலவரபீதி.

(07.12.1984)

மலையகத் தமிழர்க்ள் மனதில் பயங்கரம் ஏற்பட்டுள்ளது. தமிழருக்குச் சொந்தமான இரத்தினபுரியில் உள்ள இரண்டு கடைகளும், ஹட்டனில் உள்ள இரு கடைகளும் எரிக்கபபட்டன. 'நுவான்வெல' லயன் அறைகளில் உள்ள தமிழர்களைச் சிங்களக்காடையர்கள் தாக்கினர். தமிழருக்கெதிரான சம்பவங்கள் பதுளையிலும் இடம் பெற்றுள்ளன. விபரங்கள் குறிப்பிடப்படவில்லை.

### * திருகோணமலையில் "பலரக" சுவரொட்டிகள்.

(07.12.1984)

"தமிழீழம் கோருபவர்கள் ராஜ துரோகிகள் இவர்கள் கட்டாயமாக திருகோணமலையில் இருந்து துரத்தப்படவேண்டும்?

"சிங்களவர்கள் யாழ்நகரில் வேலைபார்க்க முடியாது என்றால், தமிழர்கள் எவ்வாறு திருகோணமலையில் வேலை பார்ப்பார்!"

"சிங்கள இளைஞர்கள்..............திருகோணமலையில் இருந்து ஈழத்தவரைத் துரத்துவதற்கு"

இவ்வாறான சுவரொட்டிகள் கறுப்பு, நீல கையெழுத்துப் பிரதிகளாக மும்மொழிகளிலும் திருகோணமலையில் காணப்பட்டன.

### * திருகோணமலையில் தமிழ்க்குடும்பங்கள் உயிருடன் எரிப்பு.

(09.12.1984)

திருகோணமலைக்குப் 15 மைல் வடக்கேயுள்ள 'திரிபாய்' இல் உள்ள தமிழ்க்குடும்பங்கள் இராணுவத்தால் எரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது இதன்போது காயமடைந்தவர்கள் ஊரடங்கு உத்தரவு வேளையின்போது திருகோணமலை வைத்தியசாலைககு எடுத்துவரப்பட்டனர்.

### * இலங்கையரசின் "சோடனைச்" செய்திகள்.

(10.12.1984)

யாழ்நகரில் இருந்து 6 மைல் தொலைவில் உள்ள கைதடியில் 'ரியூசன்' முடிந்து இரவு ஊரடங்கு உத்தரவுக்கு முன்பு வீடடையடைய அவசரமாகச் சென்று கொண்டிருந்த 200 இளைஞர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். ஆனால் இவர்கள் 3 முகாம்களிலிருந்து துப்பாக்கிகள், கிரினைட்ஸ், துண்டுப்பிரசுரங்கள், சீருடைகள் சகிதம் கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகள் என இலங்கையரசு கூறியுள்ளது.

### * இராணுவத்தினரின் "வன்முறைத்" தாக்குதல்.

திருகோணமலைக்கு 45 கி. மீ தொலைவிலுள்ள 'திரியாய்' எனும்கிராமமக்கள் அங்குள்ள ஒருவிளையாட்டு மைதானத்துக்கு வருமாறு உத்தரவிடப் பட்டு அங்கு வைத்து இரக்கமற்ற முரட்டுத்தனமான முறையில் தாக்கப்பட்டனர். 150 பேர் காயமடைந்தனர்.அவர்களில் 15 பேர் ஆபத்தானநிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் அங்கு பலர் இறந்துள்ளனர் ஆனால் எத்தனைபேர் என்பது கண்டு பிடிக்கப்படவில்லை.



### * மீண்டும் இராணுவத்தினரின் "மனிதவேட்டை"

(10.12.1984)

இன்று 6 மணியுடன் முடிவடைந்த 42 மணிநேர ஊரடங்கு உத்தரவு வேளையில் யாழ்நகர், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து அதிகமாக தமிழ் மாணவ மாணவிகள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். ஒரு ஸ்தாபனத்தின் செய்திக்கிணங்க இம்மாவட்டங்களிலிருந்து 6,000 மாணவ மாணவிகள் கைது செய்யப்பட்டனர், எனவும் 9ந்திகதி ஞாயிற்றுக்கிழமையில் மட்டும் யாழ்மாவட்டத்தில் 1000 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத்தெரிய வருகின்றது. வேறொர் ஸ்தாபனத்தின் செய்திக்கிணங்க யாழ்நகரில் 8ந்திகதி சனிக்கிழமை 500 பேரும், 9ந்திகதி ஞாயிற்றுக்கிழமை 800 பேரும் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனத்தெரியவருகிறது.

இந்த ஊரடங்கு வேளையிலும் கூட இராணுவம் வீதியோரங்களில் வசிக்கும் மக்களைக் கொன்றிருக்கின்றது. காரைநகருக்கு அருகேயுள்ள 'மடுகல்' யிலும், காங்கேசன்துறை, பருத்தித்துறை பகுதிகளிலும் முறையே 08, 12 குடிமக்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர்.

### * ஒரு "கழுகின்" வருகை.

(10.12.1984)

நீகன் நிர்வாகத்தின் தூதுவர் (அம்பாஸிடர்-அற்-லார்ஜ், ஐந்து நட்சத்திர-ஜெனரல் வோல்ட்டர்ஸ் இலங்கை வந்தார். அவர் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கைத்தூதுவராவடாக்டர் 'ஏனடஸ்கொறா' வுடன் தங்கினார். அவர் 9ந்திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் மதிய போசனம் அருந்தினார். மீண்டும் அவர், ஜெயவர்த்தனா, மற்றும் சில சிரேஷ்ட மந்திரிமாரையும் 10ந்திகதி மு. ப 11.30க்குச் சந்தித்தார்.

### * இலங்கையரசின் "ஒரவஞ்சம்"

10.12.1984

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 'தென்னைமரவாடி' எனும் கிராமம் முற்றாக அழிக்கப்பட்டு. அங்குள்ள தமிழர்கள் துரத்தப்பட்டனர் என்பதை 6ந்திகதி எமமால் அவதானிக்கப்பட்டது. 165 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இப்பரிதாபத்துக்குரியவர்கள அகதிகளாக திரிகோண மலைக்கு 55. மீ வடக்கேயுள்ள புல்மோட்டைக்கும், முலலைத்தீவுக்கு 15 கி. மீ தெறகேயுள்ள 'குமுலமுனை'க்கும் சென்றனர். அரசு இநத அகதிகளுக்கு எவ்விதத்திலும் உதவிகள் வழங்கவில்லை. மறுபுரத்தில், தமிழ்ப் பகுதியில் இருந்து அகதிகளாகச் சென்று 300க்கும் 3500க்கும் இடையிலான சிங்களவர்களுக்கு அனைத்து சௌகரியங்களும் அரசால் தரப்பட்டுள்ளன.

### * இலங்கையரசின் "ஆயுதமயப்படுத்தல்" தொடர்கிறது.

(11.12.1984)

சிங்களக் குடிமக்களுககு ஆயுதங்கள் வழங்கும் வேலைகள் திருகோணமலைக்கு உள்ளும், சுற்றுப்புறத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன. திருகோணமலைக்கு 35 கி. மீ மேற்கேயுள்ள கந்தளாய் சிங்களவாசிகளுக்கும், தெற்கேயுள்ள முதூர் சிங்களவாசிகளுக்கும் வினியோகிக்கப்பட்டன.

### * வடக்கில் தொடருகிற அரச பயங்கரவாதம்.

11.12.1984

யாழ்குடாநாட்டில் அரச பயங்கரவாதங்கள் தொடர்கின்றன. யாழ் நகரில் இருந்து 6 கி. மீ. தொலைவிலுள்ள 'கொக்குவில்' ல்ல் 6ந்திகதி ஒரு கணவனும், மனைவியும் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். வட்டுக்கோடடை, அராலி, மானிப்பாய்பகுதிகளில் இராணுவம் தமது பயங்கரவாதத்துடன் கூடிய தேடுதலைத் தொடர்ந்துளளது.

போராளிகளின் மறைவிடங்கள், ஆயுதங்கள்வெடிமருந்துகள் பற்றித் தகவல் தரும மக்களுக்குவெகுமதி வழங்கவிருப்பதாக அரசு தெரிவித்தது.

### * 'மனிதாபிமானமற்ற' இராணுவவெறித் தாக்குதல்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பெரியகுளத்தில 27 தமிழ் குடிமக்கள் நிரையாக நிறுத்தப்பட்டு அரசஇராணுவத்தால் சுடப்பட்டனர்.

www.tamilarangam.net



*** 'எழுதுமட்டுவாள்' இல் தீவிரவாதிகளின் அதிரடித்தாக்குதல்.** (21.11.1984)

அனுராதபரத்திலிருந்து சாவகச்சேரி நோக்கி, பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக வந்துகொண்டிருந்த பாதுகாப்புப்படையினர் இன்றுகாலை சாவகச்சேரியிலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள எழுதுமட்டுவானில் வைத்துத் தாக்கபபட்டனர். 5 அரச வீரர்கள் கொல்லப்பட்டதுடன், 7 பேர் காயமடைந்தனர்.

*** அரசபடையா? அக்கிரமபபுடையா?** (21.11.1984)

அனுராதபுரம் மின்சாரவாரிய அலுவலகத்திற்குள் நுழைந்த படைவீரர்கள் அங்கிருந்து பொன்னம்பலம் எனும் பொறியியலாளரையும், ஒரு 'போமன்' ஐயும் கொன்றனர்.

*** தெல்லிப்பளையில் தீவிரவாதிகளின் அதிரடித்தாக்குதல்.** (21.11.1984)

தெல்லிப்பளையில் வைத்து மாலை 3 மணிக்கு, பாதுகாப்புப்படையினர், போராளிகளால் தாக்கப்பட்டனர். இதில் 7 படைவீரர்கள் கொல்லப்பட்டதுடன்; 4 பேர் காயமுற்றனர்.

*** அரசபடையின் அச்சமும், அராஜகமும்.** 21.11.1984)

யாழ்குடாநாட்டில் 'பொலிசும்', படைவீரர்களும் தமது முகாம்களில்ருந்து வெளியேவர மறுத்து விட்டனர். சாவகச்சேரியும், அதையடுத்திருக்கும் பகுதியிலும் ஹெலிக்கொப்டர்கள் மூலம் ரோந்து சென்றனர். இக் 'ஹெலிக்கொப்டர்கள்' குண்டுகளைக் குடிசனம் மீது பொழிந்தது.

(★) கொல்லப்பட்ட குடிமக்கள் ;- செல்வி - நந்தினி, திருமதி - ஆறுமுகம், திரு - நடராஜ், திரு. கந்தையா.


(★★) 22.11.84 காலை 6 மணிக்கு 'பொலிசும்', அரச படையும்' சேவைக்காக வெளி வந்தன.

*** கொழும்பிலும் தமிழர்களிமீது தாக்குதல்.** 21.11.1984

கொழும்பு, நீர்கொழும்பு, குருநாகல், மாத்தறை பகுதிகள் புழுங்கும்படியான நிலை உள்ளன. இப்பகுதியில் தமிழர்கள் தாக்கப்பட்டனர்.

கொழும்பில், மகாலிங்கம் எனப்படும் தமிழர் ஒருவர், டார்லிரோட்டில் உள்ள மக்கள் வங்கியில் இருந்து, ஒரு காசோலையை மாற்றியபின்பு வெளிவரும்போது அங்கிருந்த பாதுகாப்பு ஊழியரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

19ம் திகதி, நிலக்கண்ணி வெடியாற் கொல்லப்பட்ட ஆரியப்பெருமாவின் இறுதிச்சடங்கு கொழும்பில் உள்ள 'கனத்த' மயானத்தில் பி. ப 2 30க்கு இடம் பெற்றது.



சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில ரெலோவினால் கைப்பற்றப்பட்ட நவீனரக ஆயுதங்களில் ஒரு பகுதி.



# செய்திகள்



## இனியும் மௌனித்திரோம் - நம் பணிந்து தமிழீழம் அமைப்போமே

தார்மீகப் போர்வையில்
கொடுங்கோலாட்சி நடத்துகின்ற
சிறிலங்கா இனவெறி அரசே!
இன்னுமா உனக்கு
இரத்தப்பசி அடங்கவில்லை!
தமிழர் இரத்தத்தை
ரசமாக பருக எண்ணுகின்ற,
ஜே.ஆர் அரசுக்கு
சமரச தூது ஒரு கேடா?
இன்று எண்ணற்ற நம்
வாலிபர்கள்
இதயத்தைக் கல்லாக்கி
கற்பாறைகளைக்
கட்டிலாக்கி கடுங்குளிரைக் கவசமாக்கி
வெயிலையும் மழையையும் பாராது
பயிற்சி கொள்ளும்
நம் அடலேறுகள்
வெறும் சமரசம் பேசவா?
துப்பாக்கி ஏந்தினர்கள்.
இல்லை! இல்லை!

தமிழீழம் வெகுவிரைவில்
அமைப்போமென்ற தளராத
நம்பிக்கை
இதுவரை காலமும்
அடங்கியிருந்த மக்கள்
ஆர்த்தெழுந்து விட்டார்கள்.

போர்க்கொடி காட்டியே!

மக்கள் சக்திக்கு அணைபோடமுடியும்மா?
மடைதிறந்த வெள்ளம்போல்
உடைப்பெடுத்துவிட்டது
தமிழீழ தாகம்
அப்பாவி மக்களை சுடுகின்ற
கூலிப்படைகளே - உங்களைத் தப்பாமல்
வேலிக்கு உரமாகப்போகும் நாள்
வெகுதூரத்தில் இல்லை!
தக்க தருணத்தில் வென்றெடுப்போம்
தமிழீழம்.

—தோழர் G.A. ராமனுதன்—

*** அனுரா இந்தியாமீது கண்டனம்.**

முதன் முறையாக, அனுராபண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் இந்தியாவைக் கண்டித்து உள்ளார். 27-11-84 அன்று தமிழ் நாட்டில் தமிழ் தீவிரவாதிகளின் பயிற்சிமுகாம்கள் உள்ளன எனும் செய்தியை இந்தியா மறுத்ததிற்காகக் இந்தியாவைக் கண்டித்தார். இந்தியாவுடன் சிறப்பான உறவை இலங்கை வைத்திருக்காமைக்கு இலங்கையரசைக் குறை கூறினார். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவின் பங்கும் தேவையென அவர் மேலும் கூறினார்.

www.tamilarangam.net



# முன்னேற்றத்தின் பகைவன்

சமாதானத்திற்கும், முன்னேற்றத்திற்கும் முட்டுக் கட்டையாக நின்று சர்வதேச சமூகத்தை மூன்றும் உலக யுத்தம் என்ற அதல பாதாளத்தை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கின்றது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர்ப் பேரிகையானது அத்திலாந்து, பசிபிக் சமுத்திரங்களை கடந்து இந்து மாகடலின் அலைகளின் இரைச்சலோடு போட்டியிட்டு இலங்கையின் ஓரங்களை வந்தடைந்து விட்டது.

தம்முடைய நாட்டிலிருந்து பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள தெற்கு தென்கிழக்கு ஆசியாவின் மீது வாஷிங்டன் ராஜதந்திரிகள் அசாதாரண கவனம் செலுத்தி வருகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் கண் கொத்திப் பாம்புபோல இந்தப் பிராந்தியத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இதையே பாராளுமன்றத்தில் திருமதி இந்திரா காந்தி பேசிய போது "எமது நாட்டை சீர்குலைப்பதிலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையை குலைப்பதிலும் வெளிநாட்டு சக்திகள் திட்டமிட்டு செயற்படுகின்றன' என்றுகூறினார்.

எந்த ரீதியாக தெற்கு ஆசியாவை தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டும் என்பதை அமெரிக்க ஏகாதிபத்தியம் 1947லேயே திட்டமிட்டு விட்டது. பிரித்தானிய ஏகாதிபத்தியம் 1947 இல் இப்பிரதேசத்தில் இருந்து விலகியதுமே தமது ஆக்கிரமிப்பு வேலைகளுக்கு அத்திவாரமிட்டு விட்டனர் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள்.

தெற்கு ஆசியாவின் மிகப் பெரிய நாடாகவும், வளர்முக நாடாகவும் உள்ள இந்தியாவை தனது அதிகார எல்லைக்குள் எவ்வாறு கொண்டு வருவது என்பதுவே வாஷிங்டன் ராஜதந்திரிகளின் கவலையாயிற்று.

1951 இல் அமெரிக்க தேசிய பந்தோபஸ்துக் கவுன்சில் பிரேரித்த நகல் அறிக்கை இவ்வாறு கூறியது. "இந்தியாவை நாம் இழந்து விட்டால் ஆசியா பூராவையுமே நாம் இழந்து விட்டதாகும். அமெரிக்காவின் பந்தோபஸ்து நிலைக்கு இது மிகப் பெரிய அச்சுறுத்தலாக விளங்கும்."

அன்று முதல் ஆசியாவில் வாஷிங்டன் வகுத்துக் கொண்ட மூலோபாயமானது இந்தியாவினதும், இந்து மாகடலினதும் ஸ்திரத்தன்மையை குலைப்பதிலேயே குறியாயிற்று.

கம்யூனிச அச்சுறுத்தலில் நின்று ஜனநாயக நாடுகளை காப்பாற்றுதல் என்ற பிரச்சாரத்தின் பின்னணியில் வாஷிங்டன் பாக்கிஸ்தானில் நுழைந்து கொண்டது.

பாக்கிஸ்தானுக்கு 1954க்கும் 1965க்கு மிடையே மட்டும் 150 கோடி டாலர்களை இராணுவ உதவியாக அள்ளி வழங்கிய அமெரிக்க ஏகாதிபத்தியம 1965 இல் பாக்கிஸ்தானை இந்தியாவின் மீது ஏவி விட்டு எல்லை மோதல்களை உருவாக்கிற்று.

மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் நேட்டோ அமைப்பை உருவாக்கி உலகில் பகல் கொள்ளை நடத்த கூட்டணி அமைத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் மத்திய கிழக்கு நாடுகளையும், சுற்றியுள்ள நாடுகளையும் கூட்டிய மத்திய ஒப்பந்த நிறுவனமாகிய சென்டோவை உருவாக்கிற்று. அதே போன்று தென் கிழக்காசிய நாடுகளை உள்ளடக்கிய சியாட்டோவையும் உருவாக்கிற்று. வாஷிங்டனின் அறிவுறுத்தலில் சென்டோவிலும், சியாட்டோவிலும் அங்கம் பெற்ற பாக்கிஸ்தான் ஆசியாவில் அமெரிக்காவின் ஜூனியர் கூட்டாளி என்ற அந்தஸ்தை பெற்றது.

நேட்டோ, சியாட்டோ, சென்டோ ஆகிய நிறுவனங்களின் ராணுவ ஒப்பந்தங்கள் "கம்யூனிச அச்சுறுத்தல்' என்பதற்கு எதிராக உருவாக்கப் பட்டதாக பாரிய பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதே பொழுதில் ஆசியாவின் மிகப்பெரிய நாடான சீனுவுக்கும், இந்தியாவுக்கும் ஏற்பட்டு வந்த எல்லை தகராறுகள் தீர்க்கப் படாது வந்ததால் சீனு ஒரு புதிய மூலோபாயத்தைக் கையாண்டது. இந்தியா தனது எல்லைகளை விஸ்தரிக்கமுயல்வதாக குற்றம் சாட்டியது. இந்தியா "தேச விஸ்தரிப்புக் கொள்கையை" கடைப் பிடிப்பதாக குற்றம் சாட்டியது.

இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையேயும், இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையேயும் ஏற்பட்ட மோதல்கள் அமெரிக்கா இந்தப் பிராந்தியத்தில் தன்னுடைய குறிக்கோள்களைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு சாதகமான சூழ்நிலைகளை தோற்றுவித்தது.

இந்த வேளையில் தான் கிழக்குப் பாக்கிஸ்தானில் அமெரிக்க ஏகாதிபத்தியம் எதிர்பாராத அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. வறுமையிலும், மிடிமையிலும் உழன்ற கிழக்குப் பாக்கிஸ்தானிய மக்கள் யஹயாகானின் ஆட்சிக்கெதிராக போர் கொடி தூக்கினர். நாளொரு வண்ணமாக வளர்ந்த அரசியல் நெருக்கடிகளின் தொடர்ச்சியில் இந்திய-பாக்கிஸ்தான் போர் வெடித்தது.

கிழக்குப் பாக்கிஸ்தானை தான் இழப்பது தெற்கு ஆசியாவில் தனது அதிகார நிலையையே மாற்றியமைத்துவிடும் என எண்ணிய வாசிங்டன் "என்டர் பிரைஸ்" என்ற விமானந் தாங்கிக் கப்பலின் தலைமையில் ஒரு பெரும் கடற்படையையே அனுப்பி வைத்து இந்தியாவை மிரட்ட முயன்றது.

மறுபுறத்தில் இந்திய-பாக்கிஸ்தான் போரில பாக்கிஸ்தானுக்கு ராணுவ ரீதியில் உதவ சீனு முன் வந்தது.

இந்த அடிப்படையிலே தான் அமெரிக்க-சீனா உறவுகள் விருத்தியடைய ஆரம்பித்தன. சீனக்கம்யூனஸ்ட் கட்சி சீனப் பெருஞ் சுவருக்கு மேலால் குத்துக் கரணம் அடித்து வெள்ளை மாளிகையின் முற்றத்தில் விழுந்தது. 71 மார்ச்சில் ஹென்றி கிசிஞ்சர் பீகிங்கிற்கு விஜயம் செய்தவுடன் தெற்கு ஆசியப் பிராந்தியத்தின் சமாதானத்திற்கான அச்சுறுத்தல் விசுவரூபம் எடுக்கத் தொடங்கியது.

பாரசீக வளைகுடாவில், ஒட்டுமொத்தமாய் இந்து மாகடல் பூராவிலும் இராணுவ முன்னிலையை முறேகன் நிர்வாகம் கொஞ்சம் கொஞ்சமாய் கட்டி வளர்த்துக் கொண்டிருக்கின்றது. இதற்கான ஐந்தாண்டுத் திட்டத்தின் முதற்படியாக 1982 இல் மட்டும் 47. 26 கோடி டாலர் செலவழிக்கப்பட்டது.

1974 இல் ஐ. நா. பொதுச் சபை ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியது. அத்தீர்மானத்தின் பிரகாரம் இந்து மா கடலை சமாதான பிராந்தியமாக்குவதற்கான ஓர் மாநாட்டை 1981 இல் கொழும்பில் நடத்தப்பட வேண்டும்.

(11ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் பாதையில்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

2. அரபு நாடுகளுக்குள்ளேயே ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவான 'எகிப்து' போன்ற நாடுகள் இருப்பது, 'ஸ்ரேல்' தனது நெருக்குவாரத்தை அதிகரிப்பதற்கு மிகவும் ஏதுவாக இருக்கின்றது.

3. 'லிபியா' போன்ற நாடுகளில் ராணுவ ஆட்சி நிலவுகின்றது. இவர்களின் ஒத்தாசை PLO இற்கு இருந்தாலும், இவற்றின் உதவிகள் தக்கசமயத்தில் PLO க்குக் கிடைக்கவில்லை.

4. PLO - வினரிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள், தீவிர, அதிதீவிரத் தன்மைகள் காரணமாக வேலைத் திட்டங்கள் ஒழுங்காக நடைபெறுவதில்லை.

PLO இல் அங்கம் வகிப்பவர்களிடையே நிலவிய பிளவுகள் காரணமாக 1982 இல் கேர்ணல் 'அபுமுசார்' தலைமையில் பாலஸ்தீனப் புரட்சிகர விடுதலை முன்னணி (Palastine revolutionary Liberation organization)- அதாவது PRLO என்ற பெயரில் ஒரு இயக்கம் உருவானது. இப்போது பாலஸ்தீன விடுதலைக்காக PLO உம், PRLO வும் இயங்கி வருகின்றன. ஜசீர் அரபாத்தின் தலைமையை, PRLO இல், அங்கம் வகித்தோர் விரும்பாமை, இந்தப் பிளவுக்குக் காரணமாக இருக்கலாம். இப்போது PRLO வினர் சிரியா, லிபியா போன்ற பகுதிகளிலும், PLO வினர் 'டுனீசியா' விலும் இருந்து கொண்டு தங்கள் புரட்சி வேலைகளைக் கவனிக்கின்றனர்.

இதேவேளை இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட ஜோர்டானின் மேற்குக் கரையினை ஜோர்டானிய சுயாட்சியின் கீழ் கொண்டு வந்தால் அங்குள்ள 15 லட்சம் பாலஸ்தீனிய அகதிகளுக்கு வாழ்வளிக்கலாம் என்ற வகையில் PLO, முபாரக்குடனும், குசேடனும் சுயாட்சி பற்றிக் கலந்தாலோசித்தனர். இதனை ஸ்ரேலிய தொழிற் கட்சி ஆதரித்தாலும், ஸ்ரேலிய அரசு எதிர்த்தது. அமெரிக்க ரீகன் கூட இதனை ஆதரித்தாலும் வற்புறுத்தவில்லை. ஆனால், இதனைப் PRLO வினர் எதிர்த்தனர்.




இஸ்ரேலுக்கெதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

1982 - செப்டம்பர் - 16 ம் திகதிக்கும் 18ம் திகதிக்கிடையில் பெய்ரூட்டில் இருந்த பாலஸ்தீன அகதிகள் முகாம்களான 'சப்ரா' 'சற்றில்லா' மீது ஸ்ரேலியத் துருப்புக்கள் நடத்திய காட்டுமிராண்டித் தனமான தாக்குதலினால் 1400க்கும் மேற்பட்டபாலஸ்தீனிய மக்கள் பலியானார்கள். இஸ்ரேலியரால் ஏற்படுத்தப்பட்ட இந்தக் கொடிய நினைவுகள் பாலஸ்தீன மக்கள்மத்தியில் இருந்து மட்டுமல்ல — உலகமக்கள் மத்தியில் இருந்து கூட நீங்கா விடத்தைப் பெற்று விட்டன. இவ்வாறு அப்பாவி மக்கள் மீதான தாக்குதலைத் தொடர்ந்த ஸ்ரேலியருக்கு, லெபனானில் பாலஸ்தீனியப் போராளிகள் புகட்டிய பாடம் போதும் போதுமென்றாகிவிட்டது.

இதுவே இவர்களுக்கிடையே நடைபெற்ற முதலாவது போராகக் கருதப்படுகின்றது. தொடர்ந்தும் லெபனானில் வாழ்வதால், மக்களின் உயிருக்கும், உடமைக்கும் சேதமேற்படுமென் பதைத் தொடர்ந்து, போராளிகள் லெபனானைவிட்டு நீங்கி, அரபுநாடுகளில் இப்போது பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.

### பாலஸ்தீன விவகாரம் இன்று :-

ஜோர்டான் நாட்டின் 'அம்மான்' நகரில் 27-11-84 இல் பாலஸ்தீன தேசிய கவுன்ஸிலின் (Palatine National-Council) 17 ஆவது மாநாடு ஜசீர் அரபாத் தலைமையில் ஆரம்பமாகியது.

### ஜசீர் ராஜினாமா அறிவிப்பு :-

இம்மாநாட்டில் ஜசீர் அரபாத் தனது ராஜினாமா பற்றி அறிவித்தார். பாலஸ்தீன் விடுதலை இயக்கத்திற்குத் தாம் போதியளவு பணி புரிந்துள்ளதாகவும், இனிமேல் வேறெவரேனும் இப்பணியைத் தொடர்ந்து நடத்த — தலைமையேற்க முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். மேலும், பெரும்பான்மையான பிரதிநிதிகள் தம்மைத் தலைவராகத் தெரிந்தெடுத்தால் மட்டுமே தாம் அப்பதவியில் இருக்கப்போவதாகவும் அறிவித்தார்.

### ஜசீர் மீண்டும் PLO - தலைவராகத் தெரிவு :-

லிபியா, சிரியா ஆதரவு கோஷ்டிகள் ஜசீர் அரபாத்தை எதிர்த்துவந்தாலும் கூட, பாலஸ்தீன தேசிய கவுன்ஸில் மாநாட்டில்உள்ள மொத்த உறுப்பினர்கள் 384 பேரில் 250 பேர் பங்கு கொண்டனர். ஜசீர் தனது தலைமைப் பதவியை ராஜினாமா செய்வது பற்றி அறிவித்தும் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அவரே மீண்டும் தலைவரானார். இது 'கெரில்லா இயக்கத்தில் அரபாத்துக்குப் பெரும்பான்மை இல்லை' என்ற சிரியா, லிபியா மற்றும் இந்நாடுகளுக்கு ஆதரவானவர்களுக்கு — 'ஜசீர் அரபாத்க்கு 2/3 பெரும்பான்மை ஆதரவு உண்டு எனக்காட்டுவதற்கு மிகவும் வாய்ப்பளித்தது.

PLO இன் இந்த 'முடிவற்ற போராட்டத்திற்கு' இந்தியாவின் ஆதரவை இந்திய ராஜ்யசபைத் துணைத் தலைவர் 'ஷியாம்லால் யாத்' மீண்டும் வலியுறுத்தியுள்ளார், PNC இன் 17ம் கூட்டத் தொடரில் உரை நிகழ்த்திய இவர் இப்போதய கூட்டத்திற்குப் பிறகு PLO தன் உட்பூசலைத் தீர்த்துக் கொண்டு, வலுவாகவும், மிகவும் ஐக்கியமாகவும் உருவாகும் என நம்புவதாகவும் தெரிவித்தார். – முற்றும் –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஹிட்லர் பாணி வதை முகாம்களில் தமிழீழ இளைஞர்களும் யுவதிகளும்

ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் இலங்கையில் தெற்குப் பிராந்தியமாகிய காலியிலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள "பூசா" என்னுமிடத்தில் கைதிகளாக கொடுமையான முகாமினுள் சிறை வைத்துள்ளனர். இந்த முகாம் 2 ஆம் உலகமகா யுத்தத்தின் போது விடிலரின் கைதிகளை சிறை வைக்கும் முகாம் போன்று காட்சியளிக்கிறது. இங்குள்ள கைதிகளின்-முடிகள் மழுங்கச் சிரைக்கப்பட்டும், ஒரு நாளைக்கு ஒரு வேளை மாத்திரமே உணவு கொடுக்கப்படுகிறது. சிறிதளவு, தண்ணீர் மாத்திரம் கழுவுவதற்கு கொடுக்கப்படுகிறது. நிலத்தில் கிடங்குகளை தோன்றி மலகூடமாகப் பாவிக்கின்றனர். அங்கு உள்ளவர்கட்கு பலவிதமான தொற்று நோய்கள் உள்ளதாக தெரிய வருகின்றது. மேலும், யுவதிகளை சிங்கள இராணுவம் கற்பழிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள இராணுவ வீரர்கள் தமிழ்ப் பெண்மணிகளை கற்பழிப்பது இப்போது பெரு நிகழ்வாகிவிட்டது. சிறிது நாட்களுக்கு முன்னர் மூன்று தமிழ் பெண்மணிகளை யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள திருநெல்வேலி என்னுமிடத்தில் இனவாதம் கொண்ட, சிங்கள இராணுவத்தினரால் துப்பாககி முனையில் கற்பழிக்கப்பட்டார்கள். அதில் ஒரு பெண்மணி 8 மாதக் கர்ப்பிணியாவார் அடுத்தவர் குழந்தை பெற்று ஒரு மாத நிலையிலும், மூன்றாமவள் திருமணமாகாத கன்னிப் பெண்ணுமாவாள். கொடுமையான ஜே. ஆர். இன் அரசாங்கம் இக் கற்பழிப்புகளை தமிழ்த்தீவிரவாதிகளே செய்தார்களெனப் பழி சுமத்துவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலுள்ளது.

யாழ்ப்பாணக்குடா நாட்டில் தற்போது உணவிற்கும், மருந்து வகைக்கும் பெருமளவில் தட்டுப்பாடு நிலவுகிறது. சிறிலங்கா அரசு யாழ் குடா நாட்டிற்கு உணவுவகைகளைக்கொண்டு செல்வதைத் தடை செய்துள்ளது. இதன் மூலம் அரசு தமிழ் மக்களை பட்டினி போட்டுக் கொல்லத் திட்டமிட்டுள்ளது. ஆனாலும், அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளெல்லாவற்றையும் தமிழ் பேசும் மக்கள் தாங்கிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தமிழீழ மக்களின் நலன் கருதும ஸ்தாபனங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமிருந்து உதவி கோரியுள்ளன.

சென்ற மூன்று வாரமாக சிறிலங்கா அரசு தமிழ் பிரதேசத்தில் வாழும் சிங்கள மக்களுக்கு ஆயுதங்களை விநியோகித்துளளது. இந்த ஆயுதபாணியாககப்பட்ட சிங்கள வெறியர்கள் தமிழ் இளைஞர்களைக் கொல்வதோடு, நிற்காமல் தமிழ் பெண்மணிகளையும் துப்பாக்கி துப்பாக்கி முனையில் கற்பழிக்கிருர்கள். இப்போது சிறிலங்காஅரசு இலங்கை பூராவுள்ள சிங்கள பாடசாலை மாணவ மாணவிகட்கு துப்பாக்கி விநியோகம் செய்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. இந்த காரணத்திற்காக ஜே. ஆர், ஜெயவர்த்தனா, கல்வி, இளைஞர் விவகார அமைச்சராகிய அவரது மருமகன் ரனில் விக்கிரமசிங்காவை மனித சக்தி, விருத்தி எனும் புதிய அமைச்சு,க்கு பொறுப்பாக நியமித்துள்ளார். இது தமிழ் மக்களை பூண்டோடு அழிக்கும் ஜே. ஆர் அரசின் புதிய திட்டம் (சதி) என நன்கு புலப்படுகிறது.

## முன்னேற்ற..... (10ம் பக்கத் தொடர்)

1977 இல் ஜெயவர்த்தனு அரசாங்கம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. இதற்கு முன்னதாகவே 1975 இல் பாக்கிஸ் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவை CIA பதவியிறக்கம் செய்ததுடன் அவரை சிறையில் வைத்தே கொன்று முடித்தது. 1974 இல் பங்காளதேஷில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய இரத்த வெறியாட்டம் மிகப் பயங்கரமானதாகும்.

பங்காளதேஷின் முஜிபுர் அரசாங்கமானது கியூபாவுக்கு சணலே விற்றதனால் இரத்தக் கொதிப்புற்ற அமெரிக்க நிர்வாகம் 1974 பங்காளதேஷில் ஏற்பட்ட கடுமையான வறட்சி நிலேயை தனக்கு சாதகமாக்கியது. அமெரிக்கா பங்காளதேஷிக்கு விற்ற கோதுமையை நிறுத்திவிடவே முஜிபுர் அரசாங்கம் கோதுமைக்கு மும்மடங்கு விலை கொடுக்க வேண்டியதாயிற்று. பஞ்சம் தலைவிரித்தாடவே மக்கள் கொள்ளை கொள்ளையாக மடிய ஆரம்பித்தனர், இதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் முஜிபுர் அரசின் செல்வாக்கு வீழவே அவரது குடும்பத்தில் பச்சைக் குழந்தைகள் உட்பட தலைகளைப் பந்தாடிய ராணுவம் ஆட்சிப் பொறுப்பை பலவந்தமாக ஏற்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தனக்குச் சாதகமான சூழலை உருவாக்கியபின் ஐ நா. தீர்மானத்திற்கு அடிபணியவா போகின்றது. 1984 கொழும்பில் நடத்தவிருந்த மாநாடு அதோடு போயிற்று.

தியகோ கார்சியாவில் வசித்து வந்த ஆயிரத்திற்கும் அதிகமான மக்களை 1970-70 இல் மொயிஷியஸ் தீவுக்கு பலவந்தமாக அனுப்பி வைத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்துமா கடலை ஆக்கிரமிக் பலமான கடலணியை இங்கே நிறுவிக் கொண்டனர்.

190 கோடி டாலர் செலவில் விஸ்தரிக்கப்பட்டு வரும் தியாகோ கார்சியா தளத்தில் 1980 இல் 12,000 அமெரிக்க வீரர்கள் இருந்தனர். அதிரடிப் படையின் பலத்தை 2 லட்சம் துருப்புகளாக அதிகரிக்க முடிவெடுத்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் அடுத்த ஏழாண்டுகளுக்கான பராமரிப்புச் செலவாக 1,000 கோடி டாலர்களை ஒதுக்கியுள்ளது.

டியாகோ கார்சியா தளத்துடனும் பாக்கிஸ்தானின் குவாதர் துறைமுகத்துடனும் இணைப்பு முனையாகவும் போர்க்கால இணைவு, தொழிற்பாட்டு முனையாவும் செயல்பட அமெரிக்க ஏகாதிபத்தியம் திருகோணமலைத் துறைமுகத்தையே நம்பி நிற்கின்றது.

இதனுல் தமிழீழப் போராட்டத்தை நசுக்கி திருகோணமலை துறைமுகத்தை தன்வயமாக்க அமெரிக்க நிர்வாகம் அனைத்து தந்திரோபாயங்களையும், ஆயுத பலாத்காரத்தையும் கையாளும் பேரினவாத ஆளும் கூட்டமும், தமிழ் சிங்களபூர்ஷ்வாவர்க்கம் துணையிருக்க தமிழீழ போராட்டத்தை நசுக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் அனுப்பி வைத்த குள்ள நாய்களே இஸ்ரேலிய மொசாட்டுகளாகும்.

எமது பூமியின் மீது இராணுவம் வெறிபிடித்து ஆடுகின்றது. எமது மக்களின் வாழ்வுக்கான ஆதாரங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. தமிழ் ஈழப் போராட்டத்தில் ஏகாதிபத்தியத்தை தோற்கடிக்கும் உறுதியோடு போராடும் தமிழீழ விடுதலை இயக்கம் வெற்றி பெறுமானால் தமிழ் மக்கள் மட்டுமல்லாது இந்திய உபகண்டமக்களும் மூன்றாவது உலக யுத்த அபாயத்தை தணித்தமைக்காக தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு நன்றியுடையவராயிருப்பர்.

எமது இயக்கம் மக்களை வழிநடத்தாது. மக்களோடு வழிநடக்கும் தலைவர் தோழர் தங்கத்துரையின் புரட்சிகர உணர்வால் ஒன்றுபடுவோம். உறுதி மிக்க போரிலே உரிமை மீட்போம்.

—தோழர் வா. மகாதேவா

## தாய்மார்கள் ஆர்ப்பாட்டம்

21-ந் தேதி தாய்மார்கள் முன்னணியினர் அரசாங்க அலுவலகம் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள் விடுத்த கோரிக்கையானது, எழுந்தமானதாக இராணுவத்தினரால் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதையும், தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்படுவதையும் நிறுத்துமாறும், முடியாவிட்டால் அரசாங்க அதிபர் பதவியை இராஜினுமா செய்யும்படி கோரிக்கை விட்டனர்.

வாசகத் தோழர்களிடமிருந்து முற்போக்கான சிந்தனையுடன் கூடிய கதைகள், கட்டுரைகள் வரவேற்கப் படுகின்றது ஆக்கங்களை திருத்துவதற்கு முழு உரிமையும் பத்திரிகைக் குழுவுக்கு உண்டு.

—பத்திரிகைக் குழு—

சந்தா விபரம் :- ஆண்டுச்சந்தா ரூபா 25/-

தொடர்பு :

இரா. தமிழ்ச் செல்வன்
35/3, வெல்கம் காலனி
அண்ணா நகர் மேற்கு
சென்னை - 40.

## போபால். (நம் பக்கத் தொடர்...)

தோடு, இத்தகைய பயங்கரவாதங்கள் வளரும் அமெரிக்காவிலே மாணவர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமானது அமெரிக்காவின் முதலாளித்துவம் உதிர்வதற்கும் — ஒழிந்து போவ தற்சமான காலம் வெகு தொலைவில் இல்லை என்பதற்கு அமெரிகக மக்கள முன் எடுத்துவைக்கும் ஒரு உறுதியான அடியாகவே இருக்கின்றது.

அதாவது, இன்று இந்தப் பிரபஞ்சமே அமெரிக்காவினால் அழுக்காகிக் கிடக்கின்றது. அதைத் துவைப்பது மானிடநேயமென்ற சவற்காரமே யொழிய வேறொன்றுமல்ல.

## தியாகி---- பிலிப் குமார குலசிங்கம்



சிறிலங்கா அரச அடக்கு முறையால் கொந்தளித்து எழுந்த அமிர்தநாயகம் பிலிப்குமாரகுல சிங்கம்அவர்கள் பல அறவழிப் போராட்டங்களில் பங்கு பற்றி தாய் நாட்டு நலனுக்காக பணியாற்றியவர் ஆவர். இவர் இளவாலையில் உள்ள பத்தாவத்தையை பிறப்பிடமாக கொண்டவர்,

அறவழிப் போராட்டங்களினால் வேக உணர்ச்சி வெளிப்படவில்லை என உணர்ந்த இவர் ஆயுதம் ஏந்தி போராடுவதன் மூலம் தமிழ் ஈழ விடுதலையை வென்றெடுக்க முடியும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டு தலைவர் தங்கதுரையுடனும், செயலதிபர் குட்டிமணியுடன் இணைந்து போராட்ட களம் காண தலைப்பட்டார்.

சிறிலங்கா பேரின்வாத அரசு இவர் பயங்கரவாதி என இவர் மேல் பல குற்றசாட்டுகள் சுமத்தியது, வெலிகடை சிறைசாலையில் தள்ளப்பட்ட இவர் இனவெறி காடையர்களினால் நடத்தப்பட்ட வன்முறையில். படுபயங்கரமாககொலை செய்யப்பட்டு தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களை கவலையில் ஆழ்த்திச் சென்று விட்டார்.

ஒரு விடுதலை தீயை அணைக்க நினைத்த அரசு இவரை கொன்றதன் மூலம் நாட்டில் அக்கினி யாகத்தை வளர்த்து விட்டது.

### ரஷ்யா கண்டனம்

இலங்கை பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீட்டை சோவியத் கம்யூனிஸ்டு பத்திரிகையான 'பிராவ்தா' கண்டித்து உள்ளது.

இதுபற்றி அந்தபத்திரிகை எழுதி இருப்பதாவது:-

இலங்கையின் திரிகோணமலே பகுதியில் ராணுவதளம் அமைக்க அமெரிக்கா முயற்சிக்கிறது. அமெரிக்காவின் திட்டத்தால்இலங்கை தமிழர் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண முடியாது.

இந்தியா-இலங்கை நல்லுறவை சீர் குலேக்கவே தமிழினப் படுகொலையை அமெரிக்கா பயன்படுத்துகிறது.


ஜனுதிபதி ரீகனின்விசேஷ பிரதிநிதியாகஇலங்கை வந்த ஜெனரல் வால்டர்ஸின் நோக்கம் இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண என்று கூறப்பட்டது.

ஆனுல் அவர் ஜெயவர்த்தனவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இலங்கை தமிழர்கள் மீது ராணுவ நடவடிக்கையை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு பிராவ்தா எழுதி உள்ளது.

நன்றி: தினசரி.

# தியாகத்தின் முகவரிகள்



மரணத்தைச் சூடியதால்
மனத்தின் மன்னர்களான
வீரர்களே!
திரிகள் மறைந்தும்
நீங்கள் தீபங்களே!!

எம் விரல்கள் நீண்டு
விழி நீரைத் தட்டி
விளக்கம் கூறியது,
"விடுதலைப் பயணத்திலே
இவர்கள்
தியாகத்தின் முகவரிகள்"

**தோழர் நிக்கலஸ்**
[சாவகச்சேரிச் சமரில் உயிர் நீத்தவர்]

"உரசி எறிந்த தீக்குச்சியாய்
உழன்று போன வாழ்வுக்கு
உரங் கொடுக்கக்
கரம் உயர்த்திய
புரட்சிச் சூரியன்கள்."



அரச கலப்பைகள் உழுது
ஆதிக்கத்தார் வீசி விதைத்த
இனவாதம்,
எம் நிலம் தொடர,
விடலை வயதுகளில்
விழிகள் வினாவெழுப்பி
மீசையரும்பிதும்
படலை திறந்து
பயணம் தொடங்கியதும்—
பின்,
மனது வியாபித்து
'மார்க்ஸியம்' மலர்ந்து,
இன்று
களத்து மரணத்தில்
முகங்கள் புதைந்ததும்—
நாளை சரித்திர ஏட்டின்
முன்னுரை வரிகள்!

**தோழர் ஈஸ்வரன்**



என்றும் எமது
இலட்சிய வேலையின்
இடைவேளைகளில்
தலைக் கவசம், துப்பாக்கி,
தானாகப் பணியும்
தியாக தீரர்கட்கு
அஞ்சலி செய்யும்!

**தோழர் ரமேஷ்**



சாவகச்சேரி பொலீஸ் நிலையம் முன்பக்கத் தோற்றம்.

## சாவகச்சேரி

(1ம் பக்கத் தொடர்..)

மிகப்பெரிய தாக்குதல் இது ஆகும். தாக்குதல் நடந்த பிரதேசத்தை அழித்து விட தீவிரமாக செயல்யட்டு வரும் ராணுவத்தினர் இப்பகுதியை அழிக்கும் நோக்குடன் குதூகலமாக 3 கவச வாகனங்களிலும், 2 ட்ரக்குகள் சகிதமாக வந்துகொண்டு இருந்தவர்களை இத்தாக்குதலின் பின் விளைவுகளை தீர்க்கமாக உணர்ந்து கொண்ட தமிழ் ஈழ விடுதலை இயக்க போராளிகளால் யாழ் நகருக்கும். சாவகச்சேரிக்கு இடையில் உள்ள கைதடியில் மறிக்கப்பட்டு நிகழ்த்திய பலமான தாக்குதலால் 2 கவச வாகனமும், 2 ராணுவ ட்ரக்கும் முற்றாக சேதமாக்கப்பட்டன. இதில் குறைந்தது 70க்கு மேல் சிறிலங்கா ராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

சிறு சிறு தாக்குதலுக்கு முகம் கொடுத்து இருந்து வந்த ராணுவம் இத்தாக்குதலுக்கு முகம் கொடுத்து சமாளிக்க முடியாமல் ஒதுங்கி முகாமகளுக்குள் ஒதுங்கி விட்டனர்.

இந நிகழ்ச்சியின்பின் சிறிலங்கா அரசின் கைங்கரியங்கள் தமிழ் ஈழப் பகுதிகளில் ஸ்தம்பிதம் அடைந்தன. ரெலோஸ்ட்டுக்களினால் அங்குள்ள மக்களுக்கு முழு பாதுகாப்புக்கு உத்தரவாதம் அழிக்கப்பட்டு வருகிறது.

அரச படைகள் வீதி வழியே ரோந்து வர அஞ்சி ஹெலிகாபடர் மூலம் ரோந்துகள் நடத்துகின்றனர்.

## நமது வெற்றிக்கு

உண்மையிலேயே நாம் வெற்றியடைவதற்கு நமக்கு என்ன வேண்டியிருக்கிறது? நமக்கு மூன்று பொருட்கள் வேண்டும்; அவை, முதலில் ஆயுதங்கள், இரண்டாவதாக ஆயுதங்கள், மூன்றுவதாக ஆயுதங்கள் திரும்பவும் ஆயுதங்களே".

தோழர் ஸ்டாலின்.

## புரட்சி இயக்கம்

"புரட்சி தத்துவம் இல்லாமல், புரட்சி இயக்கம் எதுவும் இருக்க முடியாது....

- தோழர் லெனின் -

